Lessons 18 ... 415

31 Aug 1937

JL

211, M62G5

M37.18.4,5

216484

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது

முப்பத்து நான்கு ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௮, சித்திரை, வைகாசி.

திருமலர், ௧௮.] [இதழ், ௪, ௫.

பொருளடக்கம்

சோமசுந்தர நாயகர் வரலாறு (படத்துடன்)
(Life-Sketch of Somasundara Nayagar)

சிவஞானபோத ஆராய்ச்சி
(Sivajnanabodham Critique)

இளைஞர்க்கான இன்றமிழ்
(Tamil Reader for the Young)

நாகநாட்டரசி குமுதவல்லி
(Kumudavalli, a high class Tamil Novel)

13 SEP 1937
MADRAS

ஆசிரியர் :

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

SWAMI VEDACHALAM,

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
திருமுருகன் அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிக்கப்பட்டது.

31st August, 1937.

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூபா நாலணா

All Rights Reserved.

ஓம்

ஞானசாகரக் கையொப்பநேயர்க்கு

அன்பர்காள்,

நமது ஞானசாகர, ௪அ-ஆந் திருமலரின் ௯, ௰-இதழ்கள் இப்போது நுங்கள் கையேற்றப்படுகின்றன. சென்ற நாற்பதாண்டுகளாக இடைவிடாது தமிழ்த் தொண்டு சிவத் தொண்டுகள் செய்துவருதலில் எமக்கு எத்தனை தொல்லைகளும் எத்தனை இடர்ப்பாடுகளும் உண்டென்பதை ஞானசாகரப் பழைய கையொப்ப நேயர்கள் நன்கறிவார்கள்; அதனால், ஞானசாகரம் முதலான நம்முடைய வெளியீடுகள் சிறிது காலந்தாழ்த்து வெளிவரினும், அவற்றை அவர்கள் மனம் உவந்து பெற்று வருகிறார்கள்.

ஆனால், புதியராய்ச் சேர்ந்த கையொப்பநேயர்களோ நமக்குள்ள தொல்லைகளைப் பெரும்பாலும் அறியாராகையால், ஞானசாகரங் காலந்தாழ்த்து வருவதைப் பற்றி வருந்துவதோடு, ஏன் இன்ன இதழ் இன்னும் வரவில்லை? என்று எழுதி எழுதிக் கேட்கின்றார்கள். அவர்கட்கெல்லாம் விடையெழுதிக் கொண்டிருப்பதென்றால், ஞானசாகரத்திற்குக் கட்டுரையெழுதி அவைகளை அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு மேலுங் காலந்தாழ்க்கும். ஆகவே ஒழிவிருந்தாலன்றி அவர்கட்குக் கடிதம் எழுதுவதில்லை; அதுபற்றிப் புதிய கையொப்ப நேயர்கள் மனம் வருந்தலாகாது. எவ்வளவு காலந் தாழ்த்தாலும், ஞானசாகர இதழ்கள் கட்டாயங் கையொப்பநேயர்கைக்கு வந்துசேரும் என்பதை அவர்கள் உறுதியாய் நம்பல்வேண்டும்.

இன்னுங், கையொப்ப நேயரிற் சிலர், ஞானசாகரங் காலந் தாழ்த்து வருதலால், அதுவேண்டாம்; அதில்வருங் கட்டுரைகள் நூல்களாய் முடிந்தபின் அவைதம்மை வாங்கிக் கொள்வோம் என்று சொல்லி விடுகின்றார்கள். ஞானசாகரந் தொடர்பாக நடந்தாலன்றி நம்முடைய நூல்கள் வெளிவருதற்கு வழியில்லை. அதனாலேயே, எத்தனையோ அல்லல்களுக்கு இடையிலே அதனைச் சென்ற முப்பத்துநான்கு ஆண்டுகளாக விடாது நடத்தி வருகின்றேம். ஞானசாகரத்தில் வருங் கையொப்பத் தொகை அதன் செலவிற் பாதிக்குக் கூடப் பற்றுவதில்லை. என்றாலும், அது நடந்தாற்றான் பல புதிய உரைநடை நூல்கள் நன்காராய்ந்தெழுதி வெளியிடுதற்குக் கட்டாயமான ஒரு தூண்டுதல் உண்டாகின்றது. ஞானசாகரம் நடவாதிருந்தால், இதுகாறும் யாம் நாற்பது நூல்கள் வரையில் எழுதி வெளியிட்டிருத்தல் இயலாது. ஆதலால், ஞானசாகரக் கையொப்ப நேயர்களாலேயே இத்தனை தனித்தமிழ் நூல்கள் வெளிவருதற்கு இடமுண்டாயிற்றென் றறிதல் வேண்டும்.

நமது வாழ்க்கைச் செலவுக்கும் மணச்சடங்கு பிணச்சடங்குகட்கும் வேறு வீணான வழிகட்கும் ஆயிரம் ஆயிரமாகப் பொருட்செலவு செய்தவரினும், அவையெல்லாம் நம்மவர்க்குச் செலவாகத் தெரியவில்லை. ஆனால், நமது ஞானசாகரத்திற்கு ஆண்டொன்றுக்கு ஒருகால் நாலுரூபா கொடுப்பதுதான் அவரிற் சிலர்க்குப் பெருஞ் செலவாகத் தோன்றுகின்றது! இங்ஙனமே, எம்முடைய நூல்களை ஆண்டுக்கணக்காக ஆராய்ந்தெழுதி வெளியிடுதற்கு எவ்வளவோ உழைப்பும் எவ்வளவோ பணச்செலவும் ஆகிவருதலைச் சிறிதாயினும் ஆராய்ந்து பாராதார், "இந்நூல்களுக்கு விலை மிகுதியாக வைத்திருக்கிறார்கள்" என்று சொல்லி அழுகிறார்கள்! இங்ஙனஞ் சொல்லி யழுபவர்களே, ஆயிரம் ஆயிரமாகச் சிறிதும் பயன்படாத வழிகளில் முன்பின் பாராமற் செலவிட்டுக் கடன்காரராகி மாய்கின்றார்கள்! உயர்ந்த தமது தாய்மொழிக் கல்விக்கு ஒரு சிறு தினையளவு செலவு செய்தலையும் மலையளவாகக் கருதி, மற்றைத் தீய பயனில் வழிகளில் மலையளவாகச்செய்யுஞ் செலவைத் தினையளவாகத் தானும் நினையாத வீணர் இருக்கும்வரையில் இத் தமிழ்நாடு முன்னேற்றம் அடையும் என்று கனவிலும் நினைக்கக்கூடவில்லை. கோடி கோடியாகக் கல்விக்கு ஓயாப் பெருஞ்செலவு செய்து, கற்றார் தொகையையுங் கலைநூல்களையும் நூறாயிரக் கணக்காக ஆண்டுதோறும் பெருகச் செய்துவரும் ஆங்கில நன்மக்களே இந்நிலவுலக முழுதுஞ் செங்கோல் ஓச்சி இனிது வாழ்தற் குரியர். தாய்மொழி நன்கு கல்லா மற்றைமக்கட் பதர்கள் நன்கு வாழ்தல் கனவிலும் இல்லை. அறிதிக.

ஓம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள்

வரலாறு

17 SEP 1937

"தெண்ணீர்வயற் றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து"

—ஒளவையார்.

இச்செந்தமிழ்த் தென்னாடு முழுதுங் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த சான்றோர்களைத் தொன்றுதொட்டு உடையதாயினும், இத் தமிழ்நாட்டின் வடபகுதியாகிய தொண்டை நாடே சான்றோரை உடைத்தென்று மேலைத்திருப்பாட்டில் ஏதோ ஒருண்மை இருக்க வேண்டுமென்பது நமக்குத் தோன்றுகின்றது. உலகமெங்கணு முள்ள சான்றோர்களெல்லாம் புகழ்ந்தேத்துந் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறந்தருளிய இடமாகிய திருமயிலை இத் தொண்டைநாட்டின் கண்ணதாயிருத்தலையும், மாணிக்கவாசகப் பெருமான் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை ஒளிவடிவிற் கண்டு தொழுத திருக்கோயிலாகிய திருக்கழுக்குன்றம் இத்தொண்டை நாட்டின் கண்ணதாகவே விளங்குதலையுந், திருஞானசம்பந்தப் பிள்ளையார் என்பைப் பெண்ணாக்கிய தெய்வ அருட்பெரும் புதுமை நிகழ்ந்த திருமயிலாப்பூரும் இந்நாட்டின் கண்ணதாயே திகழ்தலையுஞ், சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரை மணந்து வைகிய திருவொற்றியூரும் இதன் கண்ணதாகவே பொலிதலையும், அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகளையும் உண்மைவழாது அலங்க விரித்துத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் அடிகள் பிறந்தருளிய குன்றத்தூரும் இந்நாட்டின் கண்ணதாகவே வைகுதலையும் உற்று நோக்குங்கால் இத்தொண்டை நாட்டின்கண் இறைவனது அருள்விளக்கமும், அதனைப் பெற்ற பெரியார் தோன்றுதற்கேற்ற தோர் இசைவும் உளவாதல் குறிப்பால் உணரப்படும். இன்னும், ஆங்கில அரசுக்கு இத்தென்றமிழ் நாட்டிற் றலைநகராய் வயங்குஞ் சென்னபட்டினம் இத்தொண்டைநாட்டின் கண்ணே இலங்குதலும் இதன் பெருமையைப் புலப்படுத்துதற்குப் பின்னுமொரு குறியாம்.

இங்ஙனங் கல்வி அறிவு அருளொழுக்கங்களால் ஆன்ற பெரியார் தோன்றுதற்கும், அவர் இறைவ னருள்விளக்கத்தை நேரே காட்டு

தற்கும் ஏற்ற தகுதி வாய்ந்ததாகிய தொண்டை நாட்டினுக்கு இஞ்ஞான்று தலைநகராய் வயங்காநின்ற சென்னபட்டினத்தின் மேற்கெல்லையின்கண் உளதாகிய ஆலை என்னும் ஊரிற் சோமசுந்தர நாயகர் அவர்கள் பராபவ ஆண்டு, ஆவணித் திங்கள் உ-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையிற் (கி. பி. 1846, ஆகஸ்டு 16உ) பிறந்தனர். இவர்தந் தந்தையார் பெயர் இராமலிங்க நாயகர் என்பது; இவர்தம் அன்னையார் பெயர் அம்மணி அம்மையாரென்பது. இவர்தாம் மூத்த பிள்ளை. இவர்க்குப் பின் திருவேங்கடசாமி நாயகர், நாதமுனி நாயகர், வரதராச நாயகர் என ஆண்பாலார் மூவருந், தாயாரம்மை எனப் பெண்பாலார் ஒருவரும் பிறந்தனர்.

இவர் பிறந்த குலம் நாய்கர் குலம் எனப்படும். 'நாய்கர்' என்னுஞ் சொல் வாணிக வாழ்க்கை மேற்கொண்டொழுகின மக்கட்குழுவினர்க்குப் பண்டுதொட்டு வழங்கியதொரு பெயராதல்,

"இப்பர் பரதர் வைசியர் கவிப்பர்
எட்டியர் இளங்கோக்கள் வர்த்தொழிலர் பசுக்காவலர்
ஒப்பில் நாய்கர் வினைஞர் வணிகர் என்று
அத்தகுசிலேட்டிகள் செட்டிகள் பெயரே"

என்னுந் திவாகர சூத்திரத்தால் நன்கு விளங்கும். திவாகரத்திற்குப் பின்னெழுந்ததும், இற்றைக்குச் சிறிதேறக்குறைய 800-ஆண்டுகட்கு முற்பட்டதுமாகிய பிங்கலந்தை நிகண்டு நாய்கர் என்பதனைத் 'தனவைசியர்' பெயராக வைத்துரைக்கின்றது; அது,

"நாய்கர் எட்டியர் வணிகர் பரதர்
தாமும் பிறவுந் தனவைசியர்க்கே"

எனக்கூறும் அதன் சூத்திரத்தாற் பெறப்படும். எனவே, பண்டைநாளில் வாணிகவாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்த தமிழ்ப்பழங்குழுவினரே 'நாய்கர்' என வழங்கப்பட்டமை தெளியப்படும். இன்னுங் கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையில் (உ, க, சக),

'நாவாய் கவிழ்த்த நாய்கன் போல"

எனப்போந்த உவமைப் பொருளை உற்று நோக்குங்கால், நாய்கர் எனப் பெயரிய இக்கூட்டத்தார் அந்நாளிற் கடன்மேற் கப்பலேறிச்சென்று வாணிகம் நடாத்தி வந்தமை அறியப்படும். இந்நாய்கர் கூட்டத்தாரில் ஒருபிரிவினர் வேங்கடமலைக்கு வடக்கே சென்று குடியேறி, நாய்கர் என்னுஞ் சொல்லை நாய்க்கர், நாயக்கர், நாயுடு எனத்திரித்துத் தமக்குரிய குடிப்பெயராக வழங்கிவருகின்றனர்; இங்ஙனம் வடக்கே

சென்று வைகித் தமிழைப் பலவகையால் திரிபுபடுத்திப் பேசிய தமிழ் மக்களை பின்னர் "வடுகர்" எனவும், அவர் மாற்றி வழங்கிய மொழியே 'வடுகு' 'தெலுங்கு' எனவும் பெயர்பெற்றமை ஆராய்ச்சியாற் புலனாகின்றது. நாய்கர் என்னும் பழைய குடிப்பெயரையே இஞ்ஞான்று 'நாயகர்' என மாற்றி எழுதி வருகின்றனர். என்றாலும் உலக வழக்கில் 'நாய்க்கர்' என அவரெல்லாரும் வழங்கிவருதலை உற்றுநோக்குங்கால், அச்சொற் பழைய 'நாய்கர்' என்னுஞ் சொல்லின் ஒருசிறு மாறுதலாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு வாணிக வாழ்க்கையிற் சிறந்திருந்தமைபற்றி இவர் 'நாய்கர்' என வழங்கப்பட்ட வழக்கை ஆராயுங்கால், இச்சொற் சிறப்புப் பொருளுணர்த்தும் நகர இடைச்சொல்லினின்று உண்டானமை புலனாகின்றது. ஆண்மக்களிற் சிறந்தானை 'நம்பி' எனவும், பெண்மக்களிற் சிறந்தாளை 'நங்கை' எனவும் வழங்குதலும், 'நப்பின்னை' 'நக்கீரன்' என்னுஞ் சொற்களிலும் முதல் நின்ற நகரம் 'சிறந்தபின்னை' 'சிறந்த சொல்லன்' எனப் பொருடருதலும் போல, நாய்கர் என்னுஞ் சொல்லிலும், நாயன், நாயனார், நாய்ச்சி, நாய்ச்சியார் முதலான சொற்களிலும் நகரம் முதல் நின்று சிறப்புப் பொருள் தலைமைப் பொருள்களைத் தராநிற்கின்றது. எனவே, நாய்கர் எனப்பெயரிய பண்டைத் தமிழ் வகுப்பினர் அஞ்ஞான்று சிறந்த ஒரு குலத்தவராகப் பாராட்டப்பட்டு வந்தமை நன்கு புலனாகாநிற்கும்.

அத்துணைச் சிறந்த நாய்கர் குலமானது இந்நாளிற் 'பள்ளிகுலம்' எனக் கல்வியறிவாராய்ச்சி யில்லாக் கசடர்களால் இழித்துப் பேசப்படுகின்றது. 'பள்ளி' என்னுஞ் சொற்பொருள் வழக்கினை ஆராய்ந்து காண்பார்க்கு, அஃதுயர்ந்த பொருளைத் தந்து, அப்பெயர்க்குரிய நாய்கர் குலத்தின் மேன்மையினையே நன்கு விளக்காநிற்கும். 'பள்ளி' என்னுஞ் சொல் முதலிற் பள்ளமான அல்லது சிறிது குழிந்ததோர் இடத்தை உணர்த்தியதாகும். மான், மரை, வரையாடு, காட்டா முதலான விலங்குகள் தாங் கன்று ஈனுங்காற் சிறிது பள்ளமான இடங்களை நாடிச்சென்று, அவற்றின்கட் கன்று ஈன்று அக்கன்றைப் பாதுகாத்து வெளிக்கொணருங்காறுந் தாம் அவற்றின் கண்ணே தங் கன்றுடன் துயின்று கிடப்பது வழக்கம். ஆகவே, முதலிற் சிறிது குழிந்த இடத்தை உணர்த்திய 'பள்ளி' என்னுஞ் சொற், பிறகு விலங்கு துயிலிடத்தை உணர்த்துவதாயிற்று; அதன்பின், அது மக்கள் துயிலிடத்தையும், அதன்பின் அது அரசன் துயிலும் அரண்

மனையையும், அதன்பின் அஃது இறைவன் துயிலுந் திருக்கோயியும், அதன் பின் அது சிறார் கல்விபயிலும் பள்ளிக்கூடத்தையும் படிப்படியே பொருள்வளம்பெற் றுணர்த்தலாயிற்று.

இனி, இறைவனுக்கு விடியற்காலையிற் புதுமலர்ந்த பூக்களால் தொடுத்து அணியப்படும் மலர்மாலை 'திருப்பள்ளித்தாமம்' எனத் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றது; இது, திருத்தொண்டர் புராணம், எறிபத்தநாயனார் புராணத்திற் போந்த

"வைகறை யுணர்ந்து போந்து புனன்மூழ்கி வாயுங் கட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
கையினிற் றெரிந்து நல்ல கமழ்முகை யலரும் வேலைத்
தெய்வநாயகர்க்குச் சாத்துந் திருப்பள்ளித்தாமங் கொய்து"

என்னுந் திருப்பாட்டினால் அறியப்படும். விடியற்காலத்தே திருக்கோயிலிற் பள்ளியறையில் அமர்ந்த இறைவற்கும் இறைவிக்கும் அணியப்படுவது பற்றி இம்மலர்மாலை 'திருப்பள்ளித்தாமம்' எனப் பெயர் பெறலாயிற்றுப் போலும்! இங்ஙனம் விடியற்காலத்தே சாத்தும் மாலையினைத் தொடுக்குஞ் சிறந்த தெய்வப்பணி, நாய்கர் குலத்தவரில் ஒரு சாராராற் செய்யப்பட்டு வந்தமையின், அவர் 'பள்ளிப் பண்டாரம்' எனப் பெயர் பெற்றனர். இஞ்ஞான்றும் பூமாலை தொடுக்குந் திருப்பணியைச் செய்யாநின்ற நாய்கர் குலத்தவர் 'பள்ளிப் பண்டாரம்' என வழங்கப்படுவதும் யாங் கூறும் இவ்வுண்மையினை நிறுவுதற்கு ஒரு வலிய சான்றாமென்க. இவ்வாறு நாய்கர் குலத்தவரில் ஒருவகுப்பார்க்கு வந்த 'பள்ளிப்பண்டாரம்' என்னும் பெயரில் இறுதிக்கண் நின்ற பண்டாரம் என்னுஞ் சொல் விடப்பட்டு, அதன் முதனின்ற 'பள்ளி' என்னுஞ் சொல் மட்டும் அக்குலத்தவரெல்லார்க்கும் பொதுப்பெயராக இந்நாளில் வழங்கி வருகின்றது.

இங்ஙனமாகப், 'பள்ளி' என்னுஞ் சொல்லின் வரலாற்றை நன்காய்ந்து பார்க்கும்வழி, அஃதிறைவற்குப் பூமாலை தொடுக்குந் தெய்வத் திருப்பணியைச் செய்வார் மேலதாய் உயர்ந்ததொரு பெயராய் நிலவுகின்றதேயன்றி, அஃதெவ்வாற்றானும் இழிவுபொருடருவதாய்க் காணப்படவில்லை. அங்ஙனமாகவும், இழிந்த ஒரு வகுப்பினர்க்குரிய பெயராக மற்றை வகுப்பினர் சிலர் அதனைப் பழித்துப்பேசுவது, அவரது கல்வியறிவாராய்ச்சியில்லா மடமையினையே காட்டுகின்றது.

அற்றேல், உயர்ந்தபொருளையுடைய பள்ளி என்னுஞ் சொல் இழிந்த பொருட்டாயதற்குத்தான் ஒரு காரணம் வேண்டுமன்றோ வெனின்; அதுவுஞ் சிறிது காட்டுதும். நாய்கர் குலத்தவரிற் பெரும்பாலார் வாணிகவாழ்க்கையிற் சிறந்த செல்வர்களாயிருந்ததுமல்லாமல் அவரிற் சிறுபாலார் சிற்றரசர்களாகவும் இருந்தனர். இச்சிற்றரசர்கள் தமக்கு மேற் பெரிய வேந்தர்களாயிருந்த சேர சோழ பாண்டியர்கட்கு அடங்காமல், அவர்கட்கு இடையிடையே இடர்விளைத்து வந்தமையால்; அவர்கள் இவர்களைக் 'குறும்பர்கள்' என்னும் இழிவு பெயர் வைத்து வழங்கலாயினர்; அதனாற் 'பள்ளியர்' என்னுஞ் சொற் குறும்பர்கள் என்னும் இழிவு பொருளிலும் வழங்கப்படலாயிற்றென் றுணர்ந்து கொள்ளல்வேண்டும்.

இனி, நாயகரவர்கள் பிறந்தகுடி வைணவ மதத்தைத் தழுவிய தொன்றென்றும், அதனால் அவர்கள் பெயர் 'அரங்கசாமி நாயகர்' என முதலில் வழங்கியதென்றும் அறிந்தார் சொல்கின்றனர். இஃதுண்மையேயென்றாலும், இவர்களின் தந்தையார் வைணவமதத்திற்குரியவரல்லரென்பது, அவர் 'இராமலிங்க நாயகர்' எனப்பெயர் பூண்டிருந்தமையாற் றெளியப்படும். தந்தையார் சைவசமயத்தவரா யிருக்க; அவரீன்ற புதல்வர் புதல்வியர்க்கு மட்டும் வைணவர்க்குரிய பெயர் யாங்ஙனம் வந்தனவென்று ஆராயுங்கால், நாயகரவர்களின் அன்னையார் வைணவ குடும்பத்திற்குரியவராயிருக்க வேண்டுமென்பது உய்த்துணரப்படும். சைவசமயத்தவர் தமது சமயப் பெயர்களையேயன்றி, ஏனைச் சமயப் பெயர்களையும் பூண்டு கொள்வர்; ஆனால், ஏனை மதத்தவரோ தம்மதப் பெயர்களையன்றி ஏனை மதப்பெயர்களைப் பூண்டு கொள்ளச் சிறிதும் ஒருப்படார். 'இராமசாமி,' 'கிருஷ்ணசாமி,' 'நாராயணசாமி,' 'பக்கிரிசாமி' முதலான புறச்சமயப் பெயர்களைச் சைவசமயத்தவர் புனைந்து கொண்டுலவுதலை இன்றைக்குங் காணலாம்; ஆனாற், 'சிவன்,' 'சங்கரன்,' 'முருகன்,' 'விநாயகன்,' 'ஈசுவரன்' முதலான சைவசமயப் பெயர்களை வைணவராதல் ஏனைமதத்தவராதல் புனைந்துலவுதலை யாண்டுங் காணல் இயலாது. ஆகவே நாயகரவர்களின் தந்தையார் சைவசமயத்தவராயிருந்தாலும், அவர் தாம் வைணவ குடும்பத்தினின்றும் மணந்த மனைவியார் வைணவப்பற்று மிகுதியுமுடையவராயிருந்தமை கண்டு, அம்மனைவியார் விருப்பப்படியே தம் மக்கட்கு வைணவப் பெயர்களையே புனைந்துவிடலாயினரென்பது உய்த்துணரப்படும்.

யாம் எமது இளமைப் பருவத்திலே நாயகரவர்களை அடுத்த காலையில், அவர்களது இல்லத்தில் நாயகரவர்களின் தந்தையார் இராமலிங்க நாயகரைப் பார்த்து அவரோடு உரையாடியிருக்கின்றேம். அவர் சிறிதேறக்குறைய நாயகரவர்களின் உருவத்தையே ஒத்திருந்தனர்; அவர் அப்போது எண்பதாண்டு கடந்தவராயிருக்கலாம்; ஆயினும், அவரது யாக்கை திண்ணிதாயிருந்தது; அவரது அறிவு துலக்கமுடையதாய்த் தோன்றியது; அவர் எம்முடன் அன்பாக உரையாடிக் கொண்டு வருகையில் "நாலடியா"ரிலிருந்து ஒரு செய்யுளை எமக்கு எடுத்துக் கூறினர்; அச்செய்யுள் இன்னதென்று இப்போதெமக்கு நினைப்பில் இல்லை; நாலடியாரிற் பயிற்சியுடைய ஒருவர் நுண்ணறிவு வாய்த்தவராகத்தான் இருக்கவேண்டும். யாம் அப்போதவருடன் உரையாடிக் கொண்டு வந்ததில், அவர் அறிவிற் சிறந்தவரென்றும், அவருடைய உடல்நல மனநலங்களையே அவர்தம் முதற் புதல்வராகிய நாயகரவர்கள் அடையப் பெற்றனரென்றும் உணர்ந்து மகிழ்ந்தேம். அவர் இசைபாடுவதிலும் இசைக்கருவி இயக்குவதிலுந் தேர்ந்தவரென்றும், அவரைச் சேர்ந்தார் சிலர் சொல்லக் கேட்டேம். நாயகரவர்கள் குயிலென மிழற்றுந் தமது இசையினிமையினைத் தந் தந்தையாரினின்றே பெற்றனர். மேலும், அவர் முரணான முரட்டுக் குணமுடையவரென்பதும், நாயகரவர்கள் எமக்குக் கூறிய சில சிறு குறிப்புகளாலும், பிறர் கூறிய சொற்களாலும் உணர்ந்தேம். நாயகரவர்களுந் தந் தந்தையார்க்குரிய முரட்டுக் குணமுஞ் சிறு சினமும் உடையவர்களே; ஆயினும் இவையிரண்டும் இவர்கள்பாற் றக்க காரணம் இன்றித் தோன்றா. இவையிரண்டும் இப்பெரியாரிடத்தில் நிலைபெற்று நின்றமையினாலேதான், தமிழ் மொழியின் ஏற்றமுஞ் சைவ சமயத்தின் நுண்ணிய உண்மைகளும் இவர்கள்பானின்றுந் தோன்றிப் பெருகி, இத்தென்றமிழ் நாட்டினையும் இதன் வழியே இந்நிலவுலகம் முழுதினையும் புனிதமாக்குகின்றன; "அனல் கொளுந்தும் வெங்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும்" என்னும் ஆன்றோர் மெய்யுரையை நோக்குங்கால், அறிவிற் பெரியார்பாற் றீயனபோற் காணப்படுவனவும் உலகினுக்கு நன்மையையே பயக்குமென்பது தெளியப்படுமன்றோ?

இனி, நாயகரவர்களின் பிறப்பு வளர்ப்பு கல்விப்பயிற்சி முதலியவைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்து எழுதுதற்கு வேண்டுங் கருவிகள் இல்லை. அவைகளைத் தெரிந்தவர்கள் தக்க சான்றுகளுடன்

எழுதி அவைகளை எமக்கு உதவுவார்களாயின், நாயகரவர்களின் வரலாற்றை இன்னும் விரிவாக வரைந்து, அவ்வுதவி செய்தவர்களின் பெயர்களுடன் அதனை ஒரு தனி நூலாக வெளியிடுவேம். நாயகரவர்கள், சென்னையிலுள்ள அரசினர் கல்லூரியில் ஆங்கிலமுந் தெலுங்கும் பத்தாம் வகுப்பு வரையிற் பயின்று வந்தனரென்றும், அந்நாளிற் சூளைப்பட்டாளத்தில் நாய்கர் குலத்திற் பிறந்து சங்கராசாரியாரிடம் துறவாடையும் மாயாவாத வுணர்ச்சியும் பெற்றுக் கல்வி கேள்விகளில் வல்லராய் வயங்கிய அச்சுதானந்த சுவாமிகளால் இவர்கள் வடமொழியுந் தமிழும் உடன் கற்பிக்கப்பட்டு வளர்ந்தனரென்றுந் திருவாளர் நின்லைற தங்கவேலு முதலியாரவர்கள் 'சைவம்' என்னுந் தமிழ்வெளியீட்டில் தாம் வரைந்து வெளியிட்ட நாயகரவர்களின் சுருக்க வரலாற்றிற் கூறியிருக்கின்றனர். யாம் எழுதும் இச்சுருக்க வரலாற்றுக் காலக்குறிப்புகள் முதலியாரவர்கள் காட்டிய காலக்குறிப்புகளை மெய்யெனக் கொண்டே வரையப்பட்டிருக்கின்றன. இவைகளிற் பிழைகள் இருப்பின், தக்க சான்றுகள் கிடைக்குங்கால் அவை திருத்தப்படும்.

இனி, நாயகரவர்கள் மேற்காட்டியபடி தங்குலத்திற் பிறந்து தமக்குக் குருவாய் வாய்த்த அச்சுதானந்த சுவாமிகளால் வடமொழி தென்மொழியும் மாயாவாத வுணர்ச்சியும் அறிவுறுக்கப்பட்டு வந்ததுமல்லாமல், அரசினர் கல்லூரியிலும் ஆங்கிலமுந் தெலுங்கும் ஒருங்கு கற்பிக்கப்பட்டு நான்கு மொழிகளில் அறிவு பெறலானார்கள். நாயகரவர்களின் வடமொழிப்பயிற்சி, அம்மொழிவல்ல பார்ப்பன ஆசிரியரின் பயிற்சியை ஒப்பதன்று; இவர்களின் பயிற்சி ஒரு வகையில் அவர்களின் வடமொழிப் புலமைக்குத் தாழ்ந்ததென்றும், மற்றொருவகையில் அதற்கு அஃது எத்தனையோ மடங்கு உயர்ந்ததென்றும் அறிஞர்கள் நன்குணர்வர். வடமொழிவல்ல பார்ப்பனப் புலவர்கள், அம்மொழியிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களையும், வேதங்கள் உபநிடதங்கள் சாங்கியம் முதலான தத்துவ நூல்கள் புராணங்கள் முதலியவைகளையும் நன்கு நெட்டுருச் செய்து எழுத்தெண்ணிப் பாடம் ஒப்புவிக்க வல்லவர்கள்; ஆனாலும், அவ்வந்நூல்களின் மெய்ப்பொருள்களையும், அவை ஒன்றினொன்று மாறுபாடுறும்வழி அவற்றுட் பொருந்துவ இது பொருந்தாதிது வென்று சிக்கறத்துணர்த்தும் முறைகளையும் அவர்களிற் பெரும்பாலார் உணராதவர்கள்; அவர்கள் அவ்வட நூல்களை ஓதுவதெல்லாம் வெற்றாரவாரத்தின் பொருட்டுந், தம்மை ஏனை

மக்களினும் மிகுதியாக உயர்த்துக் கொள்ளுதற் பொருட்டேயாம். மற்று, நாயகரவர்கள் வடமொழி நூல்களை நெட்டுருச் செய்து முழுப்பாடம் ஒப்புவிக்கமாட்டாராயினும், நால்வேதங்கள் நூற்றெட்டு உபநிடதங்கள் காவியங்கள் புராணங்கள் முதலியவற்றின் உண்மைப் பொருள்களை உள்ளவாறு ஆராய்ந்து தெளிந்தவர்கள். அவைதம்முட் பொருண்முரண் நேர்ந்தக்கால், அவற்றுட் பொருந்துவதும் பொருந்தாததும் பிரித்தினிது விளக்கங் காட்டி அவ்வந்நூற் கருத்தும் மெய்ப்பொருளுந் தெளித்துக் காட்டுந் திறத்தில் தமக்கு நிகரில்லாதவர்கள். இவர்கள் தோன்றி அவ்வட நூல்களின் கருத்துண்மைகளைக் காட்டாதிருந்தால் தமிழ் மக்களேயன்றி வடநூல் வல்லாருங் கூட அவற்றை யறியாதே போயிருப்பர். வடநூற் புலமை மலிந்த பார்ப்பனர் சிலர், சில புராண உபநிடத ஆகமப் பொருள்பற்றி நாயகரவர்களோடு உரையாடி, முடிவில் நாயகரவர்கள் கூறியகருத்தே மெய்யென உடன்பட்டு வியந்ததை யாம் நேரே கண்டிருக்கின்றேம். இன்னும், நாயகரவர்களை முன்பின் அறியாத வேதியர் சிலர், நாயகரவர்களைத் தற்செயலாய் எதிர்ப்பட்டு, அவர்களொடு வேதோபநிடதப் பொருள்களைப் பற்றி உரையாட நேர்ந்தபோது, நாயகரவர்கள் மேற்கோளாக அவ்வடநூற் செய்யுட்களைச் சொல்லுமுறை பிழைபடாது மழையெனப் பொழிந்து அவற்றின் பொருண்மலைவு தீர்த்து உண்மையை யெடுத்து விளம்ப, அவையிற்றைக் கேட்ட அவ்வேதியர்கள் அவர்களைத் தம்மினத்திற் சேர்ந்த ஒரு பேராசிரியரெனவே கருதி வணங்கிச் சென்ற நிகழ்ச்சிகளும் பல.

ஒருகால் நாயகரவர்கள் ஓர் ஊர்க்குத் தனியே செல்ல நேர்ந்து, அவ்வூரிற் றமக்குத் தெரிந்தார் எவரும் இல்லாமையால், ஒரு பார்ப்பன உணவு விடுதியிற்சென்று அங்குணவு கொள்ளும் பொருட்டுச் சிறிதுநேரம் அமர்ந்திருந்தார்கள். அந்நேரத்தில் அங்கேவந்து சேர்ந்த பார்ப்பன அறிஞர் சிலர், நாயகரவர்களின் தேசுற்றப் பொலிவைக் கண்டு, அவர்களொடு பேசுதற்கு விழைவுகொண்டு, அவர்களை அணுகிப் பேசாநிற்க, அவர்கள் அவ்வறிஞர்க்குத் தெரியாத பல வேதப் பொருள்களை யெடுத்துரைப்ப, அவற்றைக்கேட்டு அவர்கள்பால் அன்பு மீதூரப்பெற்ற அப் பார்ப்பன அறிஞர்களும் அவ்விடுதிக்குரியவரும் நாயகரவர்களை வணங்கி, அவர்களைத் தம்மவராகவே நினைந்து, நறுமணங் கமழச் சமைந்த அறுசுவை யுணவூட்டி, அதற்கு அவர்கள்பாற் காசு ஏதும் பெறாமலே வழிவிடுத்தனர்.

இனி, நாயகரவர்களின் தமிழ்மொழிப்பயிற்சியைக் குறித்துச் சில சொல்லல்வேண்டும். இவர்கள் இளைஞராயிருந்த காலத்தில், அச்சிடப்பட்டு வழங்கிய நன்னூல், யாப்பருங்கலக்காரிகை முதலான தமிழிலக்கண நூல்களையும், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் முதலான இலக்கிய நூல்களையுந், திருக்குறள், நாலடியார் முதலான அறநூல்களையுந், தேவாரம் திருவாசகம் முதலான பதினொரு திருமுறைகளையுஞ், சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலான பதினான்கு சித்தாந்த நூல்களையும், ஒழிவிலொடுக்கம், வள்ளலார் சாத்திரம், திருப்போரூர் சந்நிதிமுறை முதலான பிறநூல்களையும் நன்கு பயின்றிருந்தார்கள். மேலுந், தமதிளமைக்காலத்தில் தங்குருவான அச்சுதானந்தரால் மாயாவாத வேதாந்தங் கற்பிக்கப்பட்டஞான்று, கைவல்யம், ஞானவாசிட்டம், பிரபோதசந்திரோதயம், பிரபுலிங்கலீலை முதலான பல மாயாவாத நூல்களையுங் கற்றிருந்தார்கள். இவையேயன்றி, வைணவமதத்திற்குரிய நாலாயிரப் பிரபந்தமும் அவற்றின் உரைகளும் ஆராய்ந்தறிந்திருந்தார்கள்.

மற்று, இவர்களது இளமைக்காலத்தில், தனித்தமிழ்ப் பேரிலக்கணமான தொல்காப்பியமும், தனிச் செந்தமிழ்ப் பேரிலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை முதலானவைகளும் அச்சிற் பதிக்கப்பட்டு வெளி வந்தில. இவர்கட்கு ௩௯-ஆம் ஆண்டு நடைபெறும் போதுதான் அதாவது கி. பி. 1885-ஆம் ஆண்டிற்றான் தமிழ்த் திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் முதன்முதல் தொல்காப்பியப்பொருளதிகாரம் அரிது முயன்று அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. கி. பி. 1887-ஆம் ஆண்டில் திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தனிச்செந்தமிழ்ப் பேரிலக்கிய நூலான கலித்தொகையையுந், திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஐம்பெருந் தமிழ்க்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியையும் வெளிப்படுத்தியஞான்று நாயகரவர்கட்கு அகவை ௪௧; 1889-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் பத்துப்பாட்டு என்னுந் தன்னிகரில்லாத் தனிச்செந்தமிழ்ப் பெருநூலை வெளிப்படுத்தியபோது, நாயகரவர்கட்கு அகவை ௪௩; 1892-இல் அவர்கள் தமிழ் முதற் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தை வெளியிட்டபோது, நாயகரவர்கட்கு அகவை ௪௬; 1893-இல் அவர்கள் புறநானூறு என்னும் அரும்பெருந் தமிழ்ப் பழஞ்சுரங்கமாட்சி தெரிக்கும் விழுமிய நூலை

2

ங்களினும் மிகுதியாக உயர்த்துக் கொள்ளுதற் பொருட்டுமேயாம். மற்று, நாயகரவர்களோ வடமொழி நூல்களை நெட்டுருச் செய்து முழுப்பாடம் ஒப்புவிக்கமாட்டார்களாயினும், நால்வேதங்கள் நூற்றெட்டு உபநிடதங்கள் காவியங்கள் புராணங்கள் முதலியவற்றின் உண்மைப் பொருள்களை உள்ளவாறு ஆராய்ந்து தெளிந்தவர்கள். அவைதம்முட் பொருண்முரண் நேர்ந்தக்கால், அவற்றுட் பொருந்துவதும் பொருந்தாததும் பிரித்தினிது விளக்கங் காட்டி அவ்வந்நூற் கருத்தும் மெய்ப்பொருளுந் தெளித்துக் காட்டுந் திறத்தில் தமக்கு நிகரில்லாதவர்கள். இவர்கள் தோன்றி அவ்வடநூல்களின் கருத்துண்மைகளைக் காட்டாதிருந்தால், தமிழ் மக்களேயன்றி வடநூல் வல்லாருங் கூட அவற்றை யறியாதே போயிருப்பர். வடநூற் புலமை மலிந்த பார்ப்பனர் சிலர், சில புராண உபநிடத ஆகமப் பொருள்பற்றி நாயகரவர்களோடு உரையாடி, முடிவில் நாயகரவர்கள் கூறியகருத்தே மெய்யென உடன்பட்டு வியந்ததை யாம் நேரே கண்டிருக்கின்றேம். இன்னும், நாயகரவர்களை முன்பின் அறியாத வேதியர் சிலர், நாயகரவர்களைத் தற்செயலாய் எதிர்ப்பட்டு, அவர்களொடு வேதோபநிடதப் பொருள்களைப் பற்றி உரையாட நேர்ந்தபோது, நாயகரவர்கள் மேற்கோளாக அவ்வடநூற் செய்யுட்களைச் சொல்லுமுறை பிழைபடாது மழையெனப் பொழிந்து அவற்றின் பொருண்மலைவு தீர்த்து உண்மையை யெடுத்து விளம்ப, அவையிற்றைக் கேட்ட அவ்வேதியர்கள் அவர்களைத் தம்மினத்திற் சேர்ந்த ஒரு பேராசிரியரென்றே கருதி வணங்கிச் சென்ற நிகழ்ச்சிகளும் பல.

ஒருகால் நாயகரவர்கள் ஓர் ஊர்க்குத் தனியே செல்ல நேர்ந்து, அவ் வூரிற் றமக்குத் தெரிந்தார் எவரும் இல்லாமையால், ஒரு பார்ப்பன உணவு விடுதியிற்சென்று அங்குணவு கொள்ளும் பொருட்டுச் சிறிதுநேரம் அமர்ந்திருந்தார்கள். அந்நேரத்தில் அங்கேவந்துசேர்ந்த பார்ப்பன அறிஞர் சிலர், நாயகரவர்களின் தேசுற்றப் பொலிவைக் கண்டு, அவர்களொடு பேசுதற்கு விழைவுகொண்டு, அவர்களை அணுகிப் பேசாநிற்க, அவர்கள் அவ்வறிஞர்க்குத் தெரியாத பல வேதநுண்பொருள்களை யெடுத்துரைப்ப, அவற்றைக்கேட்டு அவர்கள்பால் அன்பு மீதூரப்பெற்ற அப் பார்ப்பன அறிஞர்களும் அவ்விடுதிக் குரியவரும் நாயகரவர்களை வணங்கி, அவர்களைத் தம்மவராகவே நினைந்து, நறுமணங் கமழச் சமைந்த அறுசுவை யுணவூட்டி, அதற்கு-அவர்கள்பாற் காசு எதும் பெறாமலே வழிவிடுத்தனர்.

இனி, நாயகரவர்களின் தமிழ்மொழிப்பயிற்சியைக் குறித்துச் சில சொல்லல்வேண்டும். இவர்கள் இளைஞராயிருந்த காலத்தில், அச்சிடப்பட்டு வழங்கிய நன்னூல், யாப்பருங்கலக்காரிகை முதலான தமிழிலக்கண நூல்களையும், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் முதலான இலக்கிய நூல்களையுந், திருக்குறள், நாலடியார் முதலான அறநூல்களையுந், தேவாரம் திருவாசகம் முதலான பதினொரு திருமுறைகளையுஞ், சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலான பதினான்கு சித்தாந்த நூல்களையும், ஒழிவிலொடுக்கம், வள்ளலார் சாத்திரம், திருப்போரூர் சந்நிதிமுறை முதலான பிறநூல்களையும் நன்கு பயின்றிருந்தார்கள். மேலுந், தமதிளமைக்காலத்தில் தங்குருவான அச்சுதானந்தரால் மாயாவாத வேதாந்தங் கற்பிக்கப்பட்டஞான்று, கைவல்யம், ஞானவாசிட்டம், பிரபோதசந்திரோதயம், பிரபுலிங்கலீலை முதலான பல மாயாவாத நூல்களையுங் கற்றிருந்தார்கள். இவையேயன்றி, வைணவமதத்திற்குரிய நாலாயிரப் பிரபந்தமும் அவற்றின் உரைகளும் ஆராய்ந்தறிந்திருந்தார்கள்.

மற்று, இவர்களது இளமைக்காலத்தில், தனித்தமிழ்ப் பேரிலக்கணமான தொல்காப்பியமும், தனிச் செந்தமிழ்ப் பேரிலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை முதலானவைகளும் அச்சிற் பதிக்கப்பட்டு வெளி வந்தில. இவர்கட்கு ௩௯-ஆம் ஆண்டு நடைபெறும் போதுதான் அதாவது கி. பி. 1885-ஆம் ஆண்டிற்றான் தமிழ்த் திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் முதன்முதல் தொல்காப்பியப் பொருளதிகாரம் அரிதுமுயன்று அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. கி. பி. 1887-ஆம் ஆண்டில் திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தனிச்செந்தமிழ்ப் பேரிலக்கிய நூலான கலித்தொகையையுந், திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஐம்பெருந் தமிழ்க்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியையும் வெளிப்படுத்தியஞான்று நாயகரவர்கட்கு அகவை ௪௧; 1889-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் பத்துப்பாட்டு என்னுந் தன்னிகரில்லாத் தனிச்செந்தமிழ்ப் பெருநூலை வெளிப்படுத்தியபோது, நாயகரவர்கட்கு அகவை ௪௩; 1892-இல் அவர்கள் தமிழ் முதற் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தை வெளிவிட்டபோது, நாயகரவர்கட்கு அகவை ௪௬; 1893-இல் அவர்கள் புறநானூறு என்னும் அரும்பெருந் தமிழ்ப் பழஞ்சரிதமாட்சி தெரிக்கும் விழுமிய நூலை

வெளிப்படுத்தியபோது நாயகரவர்கட்கு அகவை சஎ; இங்ஙனமாக இவ்வரும்பெருந் தமிழ் நூல்களெல்லாம் நாயகரவர்கட்கு முப்பத்தெட்டாண்டு அகவை சென்றபின்னர் வெளிப்பட்டமையால், இவர்கள் தமது இளமைக்காலத்திலேயே இவைகளைப் பயின்று தனிச்செந்தமிழ் வளனும் விழுப்பமும் உணர்ந்தின்புறுதற்கு இடமில்லாமலே போயிற்று.

அஃதொக்குமாயினும், அவர்கள் தமக்கு நாற்பதாண்டு நிறைந்த நாள்தொட்டேனும் வெளிப்போந்த அந்நூல்களைப் பயிலாமை என்னையெனின்; அதன் உண்மையைச் சிறிது விளக்குவாம். நாயகரவர்கள் முதன்முதல் இயற்றி வெளியிட்டநூல் வேதபாஷ்யசமாஜ கண்டநம் என்று கருதப்படுகின்றது; அது வெளிவந்தகாலம் கி. பி. 1868-ஆம் ஆண்டென்றுங் குறிக்கப்பட்டிருக்கின்றது. அங்ஙனமானால், அப்போது நாயகரவர்கட்கு ஆண்டு இருபத்திரண்டு தான் ஆகல்வேண்டும். இந்நூல், வேதசமாஜம், பிரம்மசமாஜம் எனப் பெயர்பூண்ட புதுக்கூட்டத்தார் உருவவழிபாடு கூடாதென்று வரைந்து வெளிவிட்ட ஒரு சிறுநூலை மறுத்து, உருவவழிபாட்டின் உண்மையினையும், அது மக்கள் எல்லார்க்கும் இன்றியமையாததனையும் விளக்குவான்வேண்டி இயற்றப்பட்டதாகும். ஆகவே, நாயகரவர்கள் 22-ஆண்டுள்ள இளைஞராய் இருக்கையிலேயே சமயவழக்குகளிற் புகுந்து பூசலிடுங் கடமையை மேற்கொண்டாரென்பது தெள்ளிதிற் புலனாம். சமயப்போர் புரிதலிற் றலையிட்டார்க்கு, வடமொழி தென்மொழிகளிற் கடல்போல் விரிந்து கிடக்கும் நூல்களை அல்லும் பகலும் இடைவிடா தாராயவேண்டியிருத்தலின், அவர் இலக்கண இலக்கிய நூல்களை மிகுதியாய் ஆராய்தல் இயலாது. நாயகரவர்கள் பிரம்மசமாஜத்தாரை மறுக்கத் தொடங்கிய காலந்தொட்டுச், சமயஆராய்ச்சியிலேயே தமது கருத்து முழுதும் ஈடுபட்டு நின்றாரென்பது, இவர்கள் சிவாதிக்யரத்நாவளி எனப்பெயரிய சிறந்தநூலின் முதற்பாகத்தை இயற்றி, அதனைச் 'சுந்தரசிவாசாரியார்' என்னும் பெரியவரொருவர் பெயராற் றமது 27-ஆம் அகவையில் வெளியிட்டமையால் நன்கறியக் கிடக்கின்றது. இந்நூல் கி. பி. 1873-ஆம் ஆண்டு வெளிப்போந்தது; அதன்பின் எட்டாண்டுகள் கழித்து, அதாவது கி. பி. 1881-இல் சிவாதிக்யரத்நாவளியின் இரண்டாம் பாகம் அவர்களால் இயற்றப்பட்டு வெளிவந்தது. இந்நூல்களில் உண்மைவழாது நடுநின்றாராய்ந்து விளக்கியிருக்குஞ் சமய

நுண்பொருள்களையும், அவற்றிற்காக மேற்கோளாய் எடுத்துக்காட்டியிருக்கும் வடமொழி தென்மொழி நூல்களையும் உற்று நோக்குவார்க்கு, நாயகரவர்கள் தமது கட்டிளமைப் பருவம்முதல் எத்தனை சமயநூல்களை எவ்வளவு கருத்தாய்க் கற்றுத் தெளிந்திருக்கவேண்டுமென்பது தெற்றென விளங்காநிற்கும். இவ்வாறு தொடர்பாக இவர்கள் பரந்தாழ்ந்த சமயநூலாராய்ச்சியிலேயே முனைந்து நின்றமையால், தமது முப்பத்தொன்பதாம் ஆண்டிலிருந்து வெளிப்போந்த தொல்காப்பியம், கலித்தொகை, புறநானூறு முதலான பண்டைத் தனிச்செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிறலிற் கருத்தூன்ற மாட்டாதவரானார்கள். இவ்வரும்பெருங் கருவி நூல்களெல்லாம் ஒருவர் தமக்கு இருபதாண்டு நிரம்புமுன்னரே பயின்று தெளியற்பாலனவாம்; இருபதாண்டிற்குப்பின் அறிவுநூல்களே ஆராய்ந்தறியற்பாலன. நாயகரவர்கள் தமக்கு இருபதாண்டு நிரம்புமுன்னே கிடைத்த நன்னூல் முதலான பிற்காலச் சிற்றிலக்கணங்களையுந், திருக்குறள், நாலடியார், பெரியபுராணம் முதலான இலக்கியங்களையும் நன்கோதி யுணர்ந்தமையால் இருபதாண்டுக்குமேல் அறிவுநூற் பயிற்சியிலேயே தமது கருத்தைத் தோய்விப்பாராயினர். அறிவுநூற் பயிற்சியிற் கருத்து ஈர்ப்புண்டபின், அதனை மறித்துக் கருவி நூற் பயிற்சியிற் செலுத்துதல் இயலாது. தேமாங்கனியின் சுவைகண்டவர்க்கு, அதனிற் குறைந்த சுவையுடைய கனிகளில் விருப்பஞ் செல்லாமை இயற்கையன்றே. ஆகவே, நாயகரவர்கள் பண்டைத்தனிச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலாத காரணம் இதுவாதல் கண்டுகொள்க.

இவ்வாறு நாயகரவர்கள் பண்டைத் தனிச்செந்தமிழ் நூல்களைத் தமதிளமைப்பருவத்திலேயே பயின்று புலமை நிரப்புதற்கு இடம் வாயாமையால், தமிழுக்குந் தமிழ்நாட்டார்க்கும் நேர்ந்த இழப்புச் சிறிதன்று. நாயகரவர்களின் அரிய பெரிய ஆராய்ச்சியுரைகள் தனிச்செந்தமிழ் உரைநடையில் எழுதப்பட்டிருக்குமாயின், அவை தமிழுக்குப் பெரியதோர் அறிவுக்களஞ்சியமாய் இருந்திருக்கும். ஆனால் அவை வடசொற் கலப்பு மிகுதியும் உடைய உரைநடையில் அமைந்ததே தமிழ் மொழிக்கு ஒரு பேர் இழப்பாயிற்று.

நாயகரவர்களைப் போல் வடநூல்களைப் பரந்தாழ்ந்து ஆராய்ந்து, அவற்றின் உண்மை நுண்பொருள்கள் சைவசமயம் ஒன்றிலே மட்டுந்தான் பொதிந்துளவெனவும், ஏனை வைணவம் மாயாவாதம்

பௌத்தம் சமணம் முதலான மதங்களெல்லாம் வடநூல் தமிழ்நூல் உண்மைக்கு முற்றும்மாறாய்ப் பிற்பிற்காலங்களிற் றோன்றி மக்கள் மெய்யறிவு பெறவொட்டாது அவரைப் பொய்ந்நெறியிற் புகுத்தி மாறாப் பிறவிக்கடலிலே வீழ்த்துவவாயினவெனவும் நன்கு விளக்கி, நமதருமைத் தமிழ்மொழியிற் பலநூல்கள் இயற்றியும் பல்லாயிரஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் பேருதவிபுரிந்த பெரியார் இத்தமிழ் நாட்டில் இவர்க்கு முன் எவருமே இல்லை; இவர்க்குப் பின்னும் இதுகாறும் எவருந் தோன்றவேயில்லை. யாங்கூறும் இவ்வுண்மை, நாயகரவர்கள் இயற்றிய நூல்களை நன்கு கற்றார்க்கும், அவர்கள் நிகழ்த்திய விரிவுரைகளைக் கேட்டார்க்கும் விளங்காமற் போகாது. நாயகரவர்களின் விரிவுரையாலும் நூல்களாலுஞ் சமய உண்மைகளை உள்ளவாறறிந்து எல்லாம்வல்ல இறைவன் திருவடிக்கண் மெய்யன்புடையராய் ஒழுகுவார் இத்தென்னாடெங்கணும இன்னும் உளர்; அயல்மதங்களி லிருந்தோர் பலர் இவர்களின் மெய்யுரை கேட்டுத் தமது மதத்தைக் கைவிட்டுச் சைவசமயம் புகுந்தனர். இவர்கட்கு மாயாவாத வேதாந்த குருவாயிருந்த 'அச்சுதானந்த சுவாமி' என்பவரே, தம்மாணவரான நாயகரவர்கள் ஆராய்ந்து நிகழ்த்திய மெய்யுரையால் மெய்யறிவு விளங்கி மாயாவாதத்தைவிட்டுச் சைவசித்தாந்தம் புகுந்து, தமது பெயரையும் ஏகாம்பரசிவயோகிகள் என்று மாற்றிக்கொண்டனரென்றால், இவர்களுடைய மெய்யறிவின் மாட்சியையும் அதனை விளக்குஞ் சொற் போராற்றலையும் வேறெங்ஙனம் புகலவல்லேம்! இவர்களாற் சைவசித்தாந்த உண்மையும் மற்றைமதப் பொய்ம்மையும் பிரித்துணர்ந்து தெளிந்து சைவசித்தாந்தத்திற்கு உண்மைத்தொண் டாற்றிய பார்ப்பனரும் பலருளர்; அவருள் வெங்கடரமணதாசர், நருசாமிசர்மா, குளித்தலை அரங்கசாமிஐயர் என்னும் வேதாகம சைவசித்தாந்தப் பெரியார் பெயர்களை அறியாத சைவர்கள் இத்தென்னாட்டகத்திரார். இவ்வந்தணர் மூவரிற் குளித்தலை அரங்கசாமி ஐயரவர்கள் இஞ்ஞான்றுஞ் சைவத்தொண் டாற்றி வருகின்றனர். வெங்கடரமணதாசரும் அரங்கசாமி ஐயரவர்களுஞ் சைவசித்தாந்தம் புகுதற்குமுன் வைணவ மதத்தில் இருந்தோராவர்.

இளமைக்காலத்தில், அதாவது பதினேழாண்டுவரையில் மாயாவாத நூற்பயிற்சியிலே உழன்று, சைவசித்தாந்த வுண்மை சிறிதும் அறியாதிருந்த எளியேமும், நாயகரவர்கள் 'நாகை நீலலோசனி'

'திருச்செங்கோட்டு விவேதிவாகரன்' என்னுங் கிழமைத்தாள்களில் அஞ்ஞான்று எழுதி வெளியிடுவித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கற்றும், அவர்கள் அஞ்ஞான்று நாகபட்டினத்தில் அடுத்தடுத்துப் போந்து தேன்மாரியெனப் பொழிந்த விரிவுரைகளைக்கேட்டும் மாயாவாதம் முதலான மதப்பொய்ம்மையுஞ் சைவசித்தாந்த மெய்ம்மையும் பகுத்துணர்ந்து தெளிந்து, சைவசித்தாந்தம் புகுந்து, எல்லாமவல்ல தனிப் பெருந்தெய்வமான சிவபிரான் றிருவடிக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றேம்.

இன்னுந், தங்கணவனை யிழந்து கைம்பெண்ணாய்ப்போன ஒரு பார்ப்பன அம்மையார் தமக்கு ஒரேமகனாயுள்ள ஓர் இளைஞனை ஆங்கிலங் கற்பித்தற் பொருட்டு ஒரு கிறிஸ்துவர் கல்லூரியில் விடுப்ப, அவ்விளைஞனும் அதில் நன்கு கற்றுத்தேறி, ஆங்கிலமொழிப்புலமையொடு நுண்ணறிவும் பெற்று விளங்கினான். அவன் கற்ற அக்கல்லூரிக் கிறித்துவப்பாதிரிமார் அவனுக்குக் கிறித்துசமய உண்மைகளை நன்கெடுத்துப் புகட்டியதோடு, அவனைத் தமது மதத்திற் புகுமாறும் அழைத்தனர். அவ்விளைஞனுங் கிறித்துமதக் கொள்கைகள் தன்கருத்துக்கு மிகவும் இசைந்தனவாயிருத்தல் கண்டு, கிறித்துமதம் புகுதற்கு முனைந்துவிட்டான். இதனைத் தெரிந்த அவன்றன் அன்னையாரான அப்பார்ப்பனமாது, தமதுமரபில் வேதவியாகரணங்கள் பல்லாண்டு கற்றுப் புகழ் ஓங்கி விளங்கிய சமஸ்கிருத பண்டிதர்கள்பால் அவனை விடுத்து, அவர்களால் அவனைத் திருத்துதற்கு முயன்றார். ஆனால் அவ்விளைஞன், அப்பண்டிதர்கள் எடுத்துக்காட்டிய மாயாவாத வைணவக் கொள்கைகளை யெல்லாம் மறுத்துக், கிறித்துமதக்கொள்கைகளே பொருத்தமுள்ளனவென்று நிறுவினான். இங்ஙனமாகச் சமஸ்கிருதபண்டிதர் எவராலும் இந்துமதமே உண்மையானதென்று அவற்குக் காட்டப்படாது போகவே, அவ்விளைஞன் கிறித்துமதம் புகுவது உறுதிப்படலாயிற்று. அவன்றன் அன்னையாரோ தன் ஒரேமகனை உயிரோடு இழந்துவிடநேர்வதை நினைந்து நினைந்து அழுதகண்ணுஞ் சிந்தியமூக்கும் உடையராய் ஆற்றொணாத் துயரம் அடைந்தனர். இது நிகழ்ந்தது திருச்சிராப்பள்ளியிலென்பது கேள்வி. அப்போது அவ்வூரில் நிறுவப்பட்ட சைவசித்தாந்த சபையினர் நாயகரவர்களை விரிவுரை செய்தற்கு அழைத்தனர். நாயகரவர்களும் அதற்கிசைந்து அங்கேசென்று

சைவசித்தாந்த விரிவுரைகள் செய்யலானார்கள். அந்நேரத்தில் அப்பார்ப்பனமாது படும் ஆற்றாத்துயர் கண்ட சைவர்சிலர், "அம்மே, இப்போது இவ்வூரில் வந்து விரிவுரை ஆற்றுஞ் சோமசுந்தர நாயகரவர்களின் சைவசித்தாந்தப் பொருள்விளக்கத்தைக் கேட்டால், நும் மகன் திறித்துமகன் புகான்; ஆகையால், அவனை அவ்விரிவுரை கேட்க அழைத்துச்செல்க!" எனக்கூறினர். அதுகேட்ட அவ்வம்மையார், "வழுக்கிவிழுவானுக்கு ஒருகொழுகொம்பு கிடைத்தாற்" போல மிகமகிழ்ந்து, நாயகரவர்கள் நிகழ்த்திய விரிவுரைகளுக்குத் தம்மகனைக் கெஞ்சி அழைத்துச்சென்றார். அவ்விளைஞன் நாயகரவர்களின் ஒரு விரிவுரையைக் கேட்டதும், அதன்கண் உள்ளம் ஈர்க்கப்பட்டுப் பின்னும் அவர்களின் விரிவுரைகளைக் கேட்கலானான். அவைதம்மைக் கேட்கக் கேட்கச் சைவசித்தாந்தக் கொள்கையே மக்களைக் கடைத்தேற்றுதற்கேற்ற உண்மை உடையதாதல் நன்குணர்ந்து, பின்னர் நாயகரவர்கள்பால் நேரேயுஞ்சென்று தனக்குள்ள ஐயமெல்லாம் எடுத்தியம்ப, அவர்கள் அவைகளையெல்லாம் முற்றும் நீக்க, அவன் அளவுகடந்த களிப்புடையனாய், உடனே அவர்களின் திருவடிகளில் வீழ்ந்துவணங்கி, அவர்கள் அளித்த திருநீற்றை அணிந்து தூயசைவனானான். இதனைக்கண்ட அவ்விளைஞனின் அன்னையார் சொல்லுக்கு அடங்கா மகிழ்ச்சி மீதூர்ந்து "எங்கள் பார்ப்பனச்சாதியிற் பல்லாண்டு சமஸ்கிருதம் படித்த சாஸ்திரிகளெல்லாம் என்மகனைத் திருத்தமாட்டாமற் போனார்கள். கடைசியாக நாயகரவர்களன்றோ என்மகன் கிறிஸ்துமதம் போகாமல் நமது சைவமதத்திலே நிலைப்பட்டான்!" என்று தம்மவரிடத்தெல்லாஞ் சொல்லிச் சொல்லி மகிழ்வதானார். அங்ஙனம் நாயகரவர்களாற் றிருத்தப்பட்ட இளைஞர் யானென்பது எமக்குத் திட்டமாய்த் தெரியாது. ஆனாலும், அவ்விளைஞர்தாங் 'குருசாமிசர்மா' வாயிருக்கலாமென்று கருதுகின்றேம்.

இன்னும், நாகைவெளிப்பாளையஞ் சைவசித்தாந்தசபைத் தலைவரும், மாப்பெரும் புராணநூற் பாவலரான மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலான அறிஞர்களாற் பாராட்டப்பட்டவரும், எமதிளந்தைப் பருவத்தில் எமக்குச் சைவநூல் உண்மைகள் பலவற்றை அறிவுறுத்தியவருமான சோ. வீரப்பசெட்டியார் என்னும் பெரியார் சைவவொழுக்கத்திற் றலைநின்றவரேனும், மாயாவாத வேதாந்த நூற்பயிற்சியிற்றான் மிகச்சிறந்தவரா யிருந்தார். இவரை ஆசிரியராகக் கொண்டு அப்பக்கத்தில் அக்காலத்தில் வேதாந்த நூலுணர்ச்சி பெற்றார் பலர். அஞ்ஞான்று சைவசித்தாந்தம் உணர்ந்தாரும், அதனைப் பிறர்க்கு உணர்த்துவாரும் மிக அரியர். யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரவர்கள் சைவசித்தாந்தம் நன்குணர்ந்த பெரியாரே யாயினும், அவர் பெரும்பாலும் "புராணப் பிரசங்கம்" புரிவதிலேயே முனைந்து நின்றார். சைவ வைணவ மாயாவாதக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளங்கக் காட்டி, அவற்றுட் பொருந்துவதிது பொருந்தாததிது வென்று பலரறிய மலைவறுத்துச் சொல்லிச் சைவ சித்தாந்தத்தைப் பரவச் செய்தவ ரல்லர். இறைவன்மேற் குழைந்துருகி இனிய எளிய செந்தமிழ்ப்பாக்கள் பாடிய இராமலிங்க வள்ளலாருஞ் "சீவ காருணியப் பிரசங்கங்" கேட்பார் நெஞ்சங் கரையச் செய்து, அதனையே எங்கும் பரவச் செய்தாரன்றித், தாம் மிகநுட்பமாய் அறிதிறனுணர்ந்த சைவசித்தாந்தப் பொருள்களை யெல்லாம் எல்லார்க்கும் விரித்தெடுத்துச் சொல்லி விளங்கவைத்தவரல்லர். அதனால், அந்நாளிற் சைவவொழுக்கத்திற் சிறந்துநின்று சிவவழிபாடு செய்தாருங் கூடச் சைவ புராணகதைகள் அறிந்தவரேயல்லாற் சைவ சித்தாந்தஞ் சிறிதும் அறிந்தவரல்லர்; அவரெல்லாம் விழுமிய ஞானநூலென்று பிழைபடக்கருதிப் பயின்றவைகளெல்லாம் மாயாவாத வேதாந்த நூல்களேயல்லாற் சித்தாந்தநூல்கள் அல்ல. அத்தகையதான அக்காலநிலைமைக்கு ஏற்பவே, வீரப்ப செட்டியாரவர்களுஞ் சிவபுராணங்கள் நன்கோதிச், சிவவழிபாட்டில் உறைத்து நின்றவர்களேயாயினும், மிகவுயர்ந்த ஞானநூல்களெனக் கருதி அவர்கள் பயின்றனவெல்லாம் மாயாவாத வேதாந்த நூல்களேயாகும். இப்பெரியார் பிறகு தமது முதுமைக் காலத்தில், நாயகரவர்கள் நாகபட்டினத்திற் பலகாற் போந்து பலநால் நிகழ்த்திய அருமருந்தன்ன விரிவுரைகளை ஊன்றிக் கேட்ட பின்னரே, தாம் உயர்ந்த ஞானமெனக் கருதிக் கைக்கொண்ட மாயாவாத வேதாந்தத்தின் சிறுமையுஞ், சைவசித்தாந்தத்தின் பெருமையும் பிரித்துணர்ந்து தெளிந்து, மிக உறைப்புள்ள சைவசித்தாந்தச் செல்வராயினர்கள். யாம் நாயகரவர்களின் விரிவுரைகளைக் கேட்கவும், அவர்களியற்றிய நூல்களைப் பயிலவுந் தெரியாச் சிறுபருவத்தே, மாயாவாத நூல்களைப் பயின்றுகொண்டிருந்தபோது, அந்நூற் பொருள்களை நன்கெடுத்து விளக்கவல்லார் வீரப்பசெட்டியாரவர்களேயென அன்பர் சிலர் சொல்லக் கேட்டுச், செட்டியாரவர்

கள்பால் அந்நூற்பொருள் கேட்க அடுத்தக்கால், அவர்கள் "அவை மாயாதப் பொய்ப்பொருள் நிறைந்தவை; அவைதம்மை நீ பாடங் கேட்டல் ஆகாது" எனக்கூறி, அவற்றை எமக்குப் பாடஞ்சொல்ல மறுத்துச், சைவபுராணங்களையே யாம் பயிலுமாறு செய்துவந்தார்கள். இவ்வாறாக, மாயாவாதத்தில் அழுத்தமாய் நின்ற சைவப் பெரியாராகிய வீரப்ப செட்டியாரவர்களே, தாம் நீண்டகாலமாகக் கைக்கொண்டிருந்த மாயாவாத வேதாந்தத்தின் பொய்ம்மையுணர்ந்து, சைவசித்தாந்த மெய்ம்மைதேறிச் சைவசித்தாந்த ஆசிரியரான தாம், நாயகரவர்களின் விரிவுரைகளைக் கேட்டு, அவர்களியற்றிய நூல்களையும் பயின்ற பயிற்சியினாலேயாம் என்பது. இன்னுந், தமிழ் நாட்டறிஞரில் நாயகரவர்களாற் சைவசித்தாந்தம் புகுந்தார் பலருளர்; அவரையெல்லாம் எண்டெடுத்துக் காட்டலுறின் இச்சுருக்க வரலாறு மிக விரியும். நாயகரவர்களின் பெருக்க வரலாறு எழுதல் நேருமாயின் அதன்கண் அவரையெல்லாம் எடுத்துக் காட்டுங் கருத்துடையேம். அதுநிற்க.

இங்ஙனமாக வடநூல் தமிழ்நூல்களில் அரிதின் உணர்தற்பாலனவாய்க்கிடந்த சமய நுண்பொருள்களை யெல்லாம் எண்ணிறந்த சொற்பொழிவுகளானும், பற்பல நூல்களானும் வெளிப்படுத்தி, இத்தென்னாட்டின்கண் ஓர் ஒப்பற்ற அறிவுச் சுடரென உலவித், தமிழ் மக்கள் உள்ளத்துப் பரவிய அறியாமைஇருளைப் போக்கி, அவர்க்கு அறிவொளிகாட்டிய சித்தாந்த ஆசிரியரான சோமசுந்தர நாயகரவர்கள் தாம் அரிது முயன்றெழுதிய பலநூல்களையுந் தனிச்செந்தமிழ் உரைநடையில் எழுதி யிருந்தனர்களாயின், அவை தமிழுக்குந் தமிழ் மக்கட்கும் விலையிடுதற்கரிய முழுமணிகள் நிறைந்த கருவூலமாய்ச் சிறந்து திகழாநிற்கும். ஆனால், அப்பேறு எம்மனோர்க்கு வாய்த்திலது. விரும்பினால் நாயகரவர்கள் தனித்தமிழ் உரைநடையில் எதனையும் எழுதவல்லவர்களென்பது, அவர்கள் இயற்றிய பலதமிழ்ச் செய்யுட்களானும், ஆசார்யப்பிரபாவம் என்னுந் தமதரிய நூலின் பலஇடங்களில் அவர்கள் செந்தமிழ்ச் சுவைபெருக வெழுதிய உரைப்பகுதிகளானும் நன்கறியப்படும். இதற்குச் சான்றாக, இவர்கள் 'ஆசார்யப்பிரபாவ' நூலின் இறுதியில் திருஞான சம்பந்தப் பெருமான்மேற் பாடியிருக்குஞ் செய்யுட்களில் ஒன்றை எண்டெடுத்துக் காட்டுதும்:

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள்

இனி, மெய்கண்டதேவர்க்கு அவர்தந் தாய்தந்தைய ரால் இடப்பட்டபெயர் **சுவேதவனப்பெருமான்** என்ப தேயாம். இஃது அவர்மாணாக்கர் அருணந்திதேவர் 'சிவ ஞானபோதப் பாயிரத்'தில் ''வெண்ணெய்ச் சுவேதவனன்'' என்று ஓதுதலோடு, 'இருபா இருபஃது,' க௯-ஆஞ் செய் யுளில்,

''திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேதவனத்தான்
உருவென்ன வந்தெனைத்தான் உற்று'' என்று அரு

ளிச் செய்திருத்தலானும் நன்கறியப்படும். இவர்க்குச் 'சுவேதவனப்பெருமான்' எனப் பெயர்போந்த காரணம் பின்வருமாறு கூறுப:

விருத்தாசலம் என்னுந் திருமுதுகுன்றத்திற்குத் தென் மேற்கே பதினொருகல் தொலைவில் 'திருப்பெண்ணாகடம்' என்னும் ஓர் ஊர் உளது. இதற்குப் பழைய நாளில் 'திருக் கடந்தை' என்னும் பெயரும், இதன்கண் உள்ள சிவ பிரான் திருக்கோயிலுக்குத் 'திருத்தூங்கானைமாடம்' என் னும் பெயரும் வழங்கினமை, திருஞானசம்பந்தப் பெரு மானுந் திருநாவுக்கரசு நாயனாரும் இங்குள்ள சிவபிரான் மேற் பாடியிருக்குந் தேவாரத் திருப்பதிகங்களால் இனி தறியப்படும்.

இவ்வூரில் வேளாளர்மரபிற் பிறந்த 'அச்சுதகளப்பா ளர்' என்னுஞ் சிவனடியார் ஒருவர் இருந்தனர். இவர், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப பிள்ளையின் உடன் பிறந்தாளை மணம் புரிந்து இல்லறவொழுக்கத்தை இயல் வழாது நடத்திவந்தனரெனச் சிலர் கூறுவர். இவ்வாறு இவர் தம்மருமை மனைவியாருடன் கூடி நெடுநாள் வாழ்ந்து வந்தும், இவர்க்கு மகப்பேறிலதாயிற்று. அது கண்டு இவர்,

**'''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'** என்று, தெய்வத்திரு

வள்ளுவர் அருளியபடி நமக்கு மகப்பேறு வாய்ப்பினன்

றோ நாம் மேற்கொண்ட இல்லறம் நல்லறமாம்'' என மனங் கவன்று, தங்குலகுருவாகிய அருணந்திசிவாசாரியாரை யடைந்து தங்குறையினைத் தெரிவித்தனர். அவர், உடனே திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத் திருமுறையினைக் கொணர்வித்துச் சிவபிரானை யுந் திருஞானசம்பந்தரையும் வழிபட்டு, அதன்கட் பட்டுக் கயிறிட்டுப் பிரித்துப்பார்க்கப்,

**''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்.
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே''**

என்னுந் திருவெண்காட்டுத் திருப்பதிகப் பாட்டுக் கட்டுள தாயிற்று. அதுகண்டு அச்சுதகளப்பாளரும் அருணந்தி யாரும் மகிழ்ச்சி கூர்ந்தனர். அதன்பின் அருணந்தியார் அத் திருப்பாட்டின் பொருளை உற்றுநோக்கித், ''திரு வெண்காட்டுத் திருக்கோயிலின் கண்ணவான மூன்று திருக்குளங்களில் மூழ்கியெழுந்து, சிவபிரானையும் அம் மையையும் வணங்கி வழிபடுவாரைவிட்டு எல்லாத் தீவினை களும் நீங்கும் எனவும், அவரைக் கொடிய பேய்களும் பிடியாவாய் அகலும் எனவும், அவர்க்குப் பிள்ளைப்பேறும் அவர் உள்ளத்திற் பெற விழைந்த வரங்கள் எல்லாமுங் கிடைக்குமெனவும், அவை அங்ஙனம் ஆகுமோ ஆகாவோ வென ஐயுறுதலும் வேண்டாவெனவும் இப்பாட்டின் கண் ஆசிரியர் தெளித்துக் கூறியிருத்தலால், இதன்கட் சொல்லப்பட்டபடியே, நீவிர் நும் மனைவியாருடன் திரு வெண்காடு சென்று, திருக்கோயிற் குளங்கள் மூன்றிலும் நீராடியெழுந்து அம்மையப்பரை வழிபட்டு வம்மின்கள்! நுமக்குப் பிள்ளைப்பேறு உண்டாதல் திண்ணம்.'' என வற் புறுத்திச் சொல்லினர். அவ்வாறே செய்வலெனக்கூறி, அவரை வணங்கி விடைபெற்றுக் கடிதிற் சென்ற அச்சுத களப்பாளர் சிலநாளிற் றம்மனைவியாருடன் திருவெண்காடு

அடைந்தனர். திருவெண்காடு, சீகாழிக்குத் தென்கிழக்கே ஏழுகல் தொலைவி லுள்ளது. தம்மாசிரியர் கற்பித்தபடியே அச்சுதகளப்பாளரும் அவர்தம் மனைவியாரும் அவ்வூரில்வைகி, அங்குள்ள திருக்குளங்கள் மூன்றிலும் நாடோறும் முறைப்படி நீராடி, ஆண்டுத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் அம்மையப்பரை அன்பினால் உளங் குழைந்துருகி வணங்கி வழிபட்டு வராநிற்ப, அவர்தம்மனைவியார் கருக்கொண்டார். இறைவன் தமக்குச் செய்த அருட்டிறத்தை நினைந்து வியந்து பலகாலும் வணங்கி, அங்கிருந்தும் புறப்பட்டுத் தமதூர்க்குச் செல்லாமல், தம்மனைவியாரின் தாய் வீட்டுக்கே அவரை அழைத்துச் செல்லும்பொருட்டு, அச்சுதகளப்பாளர் மனைவியாருடன் திருவெண்ணெய்நல்லூரே போய்ச் சேர்ந்தனர். தலைப் பிள்ளைப் பேற்றிற்குத் தாய்வீடு செல்வதே தமிழ்நாட்டு மகளிர்க்குள் வழக்கமாயிருத்தலின், அச்சுதகளப்பாளரும் அவ்வழக்கப்படியே தம்மனைவியாரை அவர் தந் தாய் வீட்டிற்கு அழைத்தேகினரென்க.

சிலர் கருதுமாறு, மிகப் பெருஞ்செல்வரான திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பபிள்ளை, அச்சுதகளப்பாரின் மனைவியோடு உடன் பிறந்தவரானால், இவ்விருவரும் அவரது இல்லத்தில் எத்துணைவளத்துடன் இருந்தவராதல் வேண்டுமென்பதை யாங் கூறல் வேண்டா. அம்மையார் பத்தாந்திங்களில் ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றனர். திருவெண்காட்டிறைவர் திருவருளால் அம்மகவு பிறந்தமை பற்றி, அதற்குத் ‘திருவெண்காடன்’ அல்லது ‘சுவேதவனன்’ என்று பெயர் அமைத்தார்கள். ‘வெண்காடன்’ என்பது தமிழ்ப்பெயர்; ‘சுவேதவனன்’ என்பது அதற்கு நேரான வடமொழிப் பெயர். வெண்மையைச் சுவேதம் என்றுங், காட்டை வனம் என்றும் வடவர் வழங்குவர். மெய்கண்ட தேவர்க்குச் ‘சுவேதவனன்’ என்னும் பெயர் போந்தகாரணம் இங்ஙனமாதல் கண்டுகொள்க.

சுவேதவனப் பெருமான் எல்லாச் செல்வ வளங்களோடுந் திருவெண்ணெய்நல்லூரின்கண் உள்ள தந் தாய்மாமன் இல்லத்திலேயே வளர்ந்துவரலானார். எளிய நிலையிலுள்ள தாய்தந்தை தமையன்மாருந் தமதில்லத்தில் மகப்பேற்றிற் கென்று வருவிக்கப்பட்டமகளை, மகப்பேறு எய்தியபின்னும் இரண்டோர் ஆண்டுகள் கழியும் வரையிற், கணவன்வீட்டுக்கு விடாமை தமிழ்மக்கட்குட் சிறந்ததொரு வழக்கமாய்க் காணப்படுகின்றது. எளியமக்களுக்குள்ளேயே இவ்வழக்கம் இத்துணைவேரூன்றி நிற்குமானால் எல்லாச் செல்வங்களும் ஒருங்குடையார்பால் இவ்வொழுகலாறு இன்னும் எத்துணை மிகுதியாய் ஆழ்ந்து நிலைபெற்றுநிற்றல் வேண்டும்! ஆகவே, சுவேதவனப்பெருமான் திருவெண்ணெய் நல்லூரிற் றந் தாய் மாமனது மாளிகையிலேயே தம் அன்னையாருடன் இனிதிருந்து வளரலானார் என்பதில் ஏதொருமாறுபாடும் இல்லையென்க. இங்ஙனம் இவர்தம் அன்னையார் இவரைக் கருக்கொண்டவுடனே திருவெண்ணெய்நல்லூரி லுள்ள அவர்தந் தாய் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் விடப்பட்டமையும், அவர் அங்கே கருவுயிர்த்தபின் அவர்தம் மகவுடன் கணவன்மனைக்குச் செலுத்தப்படாமல் தாய்வீட்டிலேயே நெடுநாள் இருந்தமையும், அதனாற் சுவேதவனப்பெருமான் திருவெண்ணெய் நல்லூரிற் றந் தாய்மாமன் இல்லத்திலேயே வளர்ந்து வந்தமையும், பண்டுதொட்டுப் போதருந் தமிழர்தம் ஒழுகலாறாயிருப்பவும், இதனையறியாதார், சுவேதவனப் பெருமான் திருவெண்காட்டுத் திருக்குளத்தின் படிக்கரையிற் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையென்றும், அங்ஙனங் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையாதல் பற்றி ‘எவரோ பெற்றுக் கிடத்திப்போன பிள்ளையை அச்சுதகளப்பாளர் வளர்க்கின்றார்!’ என ஊரவர் பழிகூறுநின்றன ரென்றும், அப்பழிக்கஞ்சித் தமதில்லத்திற்கு வந்த தன்மைத்துனர் பால் அம்மகவினைத்தந்து அதனைவளர்த்துக் கொள்ளுமாறு

210484

அச்சுதகளப்பாளர் விடுத்தனரென்றுந் தமக்குத்தோன்றிய வாறெல்லாம் ஒருவர் வரைந்துவிட்டனர்*.

அங்ஙனம் எடுப்புப்பிள்ளை எடுத்து வளர்க்குங் கருத்துடையரானால், அச்சுதகளப்பாளர் பெருஞ் செல்வராதலால், தமது வேளாளமரபிலேயே அழகிய ஒருமகவைப் பலரறியப் பெற்றுப், பழிச்சொல்லுக் கிடனின்றி அதனைத் தம்முடன்வைத்தே வளர்த்து மகிழ்ந்திருத்தல்கூடும். இங்ஙனஞ் செய்தலை விடுத்துத் தங் குரவார்பாற் சென்று தேவாரத்திற் கயிறு செருகிப்பார்த்ததும், அதன்கட்டோன்றிய "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளநினை வாயினவே வரம்பெறுவர்" என்னுந் திருஞானசம்பந்தர் திருபதிகப்பாட்டைக் கண்டு களித்துத் திருவெண்காட்டிற்குத் தம்மனைவியுடன் ஏகி அதிற் சொல்லப்பட்டவாறே இறைவனை வழிபட்டதும் வீணாய் ஒழியும்; மேலும், அத்திருப்பாட்டின் பொருளை நம்பி வரங்கிடந்த அச்சுதகளப்பாளர்க்கு அதிற் சொல்லப்பட்டவாறே மகப்பேறு வாய்த்திலதாயின், அப்பாட்டின் பொருளில் நம்பிக்கை அறுதலொடு, திருவெண்காட் டிறைவன்பாலும் அன்பு மிகாதன்றே? அத்துணைத் தவங்கிடந்துந் தம்மனைவியார் மகப்பெறுதல் இல்லையாயொழியக், கண்டெடுத்த வேறோர் அகதிப்பிள்ளைக்குத் திருவெண்காடன் அல்லது சுவேதவனன் எனப் பெயர் புனைதலினும் அவர்க்குக் கருத்துச் செல்லாதன்றே? மற்று, அவர் தம்மகனுக்குச் சுவேதவனன் எனப் பெயர்சூட்டிய அன்பின் உறைப்பினை உற்றாராயுங்கால், அவர், தாங் கயிறிட்டுக்கண்ட தேவாரத் திருப்பதிகப்படியே மனைவியுடன் திருவெண்காடு சென்று, தவங்கிடந்து, அது புகன்றவண்ணமே திருவெண்காட்டிறைவர் திருவருளால் அவர்தம்மனைவி வயிறு வாய்த்துச் சிறந்த ஓர்

* இங்ஙனஞ் செய்தார், சிவஞானபோதத்தைப் பாண்டிப்பெருமாள் விருத்தியுரையுடன் பதிப்பித்த திரு. சண்முகசுந்தர முதலியாராவர்.

ஆண்மகவு ஈன்றமை நோக்கி, இறைவன்பால் அளவுகடந்த அன்பு மீதூர்ந்தே சுவேதவனன் என அதற்குப் பெயரிட்டாரென்பது நன்கு துணியப்படுமென்க.

அற்றேல், அவரைக் கண்டெடுத்த பிள்ளையென்று அங்ஙனம் ஒருவர் வரைந்த தென்னையெனின்; தவத்தாற் பெரிய சான்றோர் தாயின் கருப்பையிற்றங்கி ஏனைப் பொது மக்களைப்போற் பிறந்தாரெனக் கூறுதலைக் குற்றமென அவர் கருதினாராகலின் அங்ஙனம் வரைந்திட்டார். அவர்போல்வார், சைவசமயாசிரியரும் அவரோடொத்த மாட்சியுடைய சந்தானகுரவருந் தாயின் கருப்பையிற்றங்கிப் பெண்குறி வாயிலாப் பிறந்தாரெனக் கூற ஒருப்படாமல், அவரெல்லாம் இறைவனருளால் அன்னைவயிற்றினின்றும் பிறவாமல் திடீரென ஓரிடத்திற் குழந்தையாய்க் கிடந்தாரெனக் கூறுதலையே சிறந்ததாகக் கருதி அங்ஙனமே வரைந்திட்டிருக்கின்றார். இவ்வாறு கூறுதல் உயர்ந்த எண்ணம்பற்றித் தோன்றிய தொன்றேயாயினும், அஃதிறைவன் நிகழ்த்தும் படைத்தற் றொழிலின் விழுப்பமும் நுட்பமும் உணராக் குறுகிய அறிவின்பான்மையால் உண்டாயதாகலின், அதனை விரிந்த மெய்யறிவினார் ஏற்றுக்கொள்ளாரென்க. இவ்வுலகத்தில் உயிர்கள் தோன்றிய காலந்தொட்டு, அவையிற்றின் உடம்புகளை ஆண்பெண் சேர்க்கையினாலேயே இறைவன் தோற்றுவித்து வருதல் காணப்படுதலின், தாயின் கருப்பையினின்று மகவினைப் பிறப்பித்தலே இறைவன் அமைக்கும் அமைப்பாகுமன்றி, அதற்கு மாறுவதொரு தோற்றம், அவன்றன் அமைப்பாதல் செல்லாமையின், அஃது யாண்டுந் தோன்றாதென்பதே திண்ணம். இந் நிலவுலகின்கண்ணே பற்பலதேயங்களில் ஆங்காங்குக் குழுமியிருக்கும் மக்கட்குழுவினரில் எண்ணிறந்த சான்றோர்கள் தோன்றியிருக்கின்றனர்; அவரெல்லாந் தாயின் கருப்பையினின்றே பிறந்தாரல்லது பிறிதொரு வகையிற் றோன்றினாரென்பது பெறப்படாமை

யால், இறைவன் வகுத்த இவ்வகுப்புக்கு மாறாகப் பேசுதலை வழக்குடைத்தாம். தாய்வயிற்றினின்று உயர்ந்த அறிவினரைத் தோற்றுவித்தல் குற்றமெனக் கண்டாரையின், இறைவன் அவர்களை அவ்வாறு பிறப்பியானன்றே. எத்தனையோ சான்றோர்கள் தம்மன்னையின் கருப்பையிற் றங்கிப் பிறந்ததைப் பிறப்பதை நங்கண்ணெதிரே இஞ்ஞான்றுங் கண்டோமே காண்கின்றோமே. இறைவன் பலகோடியாண்டுகளாகச் செய்து போதரும் இப்படைத்தற் றொழிலுக்கு மாறாக எக்காலத்திலாயினும் எவ்விடத்திலாயினும் ஒருவர் வேறொருவாற்றால் தோன்றியதை எவரேனும் மெய்ப்பித்துக் காட்டல் முடியுமா? முடியாதே. அங்ஙனமிருக்க, இறைவன் நிகழ்த்தும் படைப்புக்கு மாறாக ஒருவர் தோன்றினாரென ஒருவர் ஒருகதை எழுதினாரால், அது வெறும் பொய்க்கதையே யாகு மல்லது, உண்மை யுரைப்ப தாகாதென்க. மேலும், ஒரு பெரியார், தந் தாய்தந்தையரின் சேர்க்கையால் தாய் வயிற்றினின்றும் பிறந்ததைக் குறைவென நினைந்து, அவரை அங்ஙனம் பிறந்தாரெனக் கூறாமல், அவர் தெய்வத்தினருளால் திடீரென ஒரு சிறுமகவாய்க் குளக்கரையிற் கிடந்தாரெனக் கரைந்தால், உலகத்தார் அங்ஙனம் ஒரு நிகழ்ச்சியினை யாண்டும் எக்காலத்துங் கண்டதின்மையின், அக்கட்டுக் கதையினை நம்பாமையோடு, எவரோ களவிற் பெற்றபிள்ளையை அங்கே கிடத்திப் போயினாரெனவே நவல்வதுஞ் செய்வர். ஆகவே, தாய்வயிற்றினின்று பிறக்கும் இயற்கை நிகழ்ச்சியினைக் குற்றமென நினைந்து, அதனை மறைக்க ஒரு பொய்யுரையினைப் புனைந்து கட்டிவிட்டால், எவளோ இழிந்த குலத்தினளான ஒரு கைம்மை களவிற் புணர்ந்து பெற்ற மகவை அங்ஙனங் கிடத்திப் போயினளென அதனினுங் குற்றமாயதொரு பழிச்சொல்லே பரவாநிற்கும். இதற்குச்சான்று மெய்கண்டதேவரைக் கண்டெடுத்த பிள்ளையெனக் கதைகட்டி

பட்டனர். அதற்குப்பிற் சிலநாளில் மூன்றாஞ் 'சியார்சு' மன்னர் இவர்க்கு 'நைட்' என்னுஞ் சிறந்தபட்டமும் வழங்கி இவர்க்குப் பெருஞ்சிறப்புச் செய்தனரென்பது.

உலகத்திற்குப் பெரும்பயன் றரும் ஒருசிறந்த முயற்சியினைத் துவங்கி அதனை முடித்துப் பயன்படுத்துவதிற் றலையிட்டமேலோர்கள், தாம் பிறந்தகுடி எவ்வளவு இழிந்ததும் ஏழைமையுடையதுமாயிருப்பினுந், தம்முடைய பிறப்பின் இழிபும் எளிமையும்நோக்கிக் கல்லாக் கசடர்களுங் கற்றும் மெய்யறிவு பெறாதவர்களும் அவரை எவ்வளவுதான் இழித்துரைப்பினுந், தாம் எடுத்த நன்முயற்சி நன்கு முடியாவாறு அக்கயவர்கள் அவர்க்கு எவ்வளவுதான் தீங்கிழைப்பினும், அவர் தாமெடுத்த முயற்சியைச் சிறிதுஞ் சோர்ந்துவிடாராய் அதனை எங்ஙனமாயினும் நன்கு முடித்துத், தமக்கு இன்னாசெய்தாரும் அதனால் இனிது பெற்று மகிழ்ந்திடப் புரிகுவர்; என்னும் இவ்வுண்மையினை ஆர்க்குரையரின் வாழ்க்கை வரலாறு நன்கு விளக்குதல் காண்க. செயற்கரிய செய்பவரே பெரியர், அது செயமாட்டாதவரே சிறியர் என்பது,

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்'' என்னுந் திருக்குறளுரையாலும் நன்கு விளங்குகின்றதன்றோ? கல்வியுந் தவமும் நன்முயற்சியும் வாயாத கீழ்மக்கள் தம்மை உயர்குலத்தவராகவும், அம்மூன்றும் வாய்ந்த மேன்மக்களை இழிகுலத்தவராகவும் பிழைபடக் கருதியுஞ் செருக்கிக் கூறியுந், தாம் உள்ளீடில்லாப் பதராதலைக் காட்டுதலுடன், மேன்மக்கள் செய்யும் நன்முயற்சிகளைப் பயனிலவாக்குதற்கும் மடிகட்டி நிற்கின்றனர். அன்னவரை நோக்கியன்றோ நாலடியார்,

''நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை-தொல்சிறப்பின்

ஒண்பொருளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றான் ஆகுங் குலம்'' என்று நுவலுவதா

யிற்று? ஆர்க்குரையரை அவர் பிறந்த குலம்பற்றியும், அவர் முதலிற் செய்து போந்த சிறைத்தற்றொழில்பற்றியும் இழித்துப் பேசியவர்களே, அவர் அரிதின் ஆக்கிய நூற்பொறியாற் சீருஞ்செல்வமும் பெற்றபின், அவரையே தமதூருக்கு நாட்டாண்மைக்காரராக்கி உயர்த்தி வைத்தனர்கள். நன்முயற்சி யுடைய உண்மையாளர் பக்கமே இறைவன் நிற்றலால், அவர்க்குப் பகைவராய் நிற்பார் செய்யுந் தீங்குகள் அவரை அணுகாமலே விலகி ஒழிகின்றன. ஆதலால், அறிவும் உழைப்பும் விடாமுயற்சியும் உடையராய்த் தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்தலே மக்கட்பிறவி யெடுத்தாரெல்லார்க்கும் உரிய இன்றியமையா ஒழுகலாறுமென்று தெளிந்துகொள்க.

திருவள்ளுவர் வாழ்க்கை

திருவள்ளுவ நாயனார் தம் அருமை மனைவியார் பாப்பம்மையாரோடு அன்புடன் அளவளாவி இல்லற வாழ்க்கையினை இனிது நடாத்தப் புக்கபின், அதனை இடர்ப்படாது நடத்துதற்கு இன்றியமையாது வேண்டிய பொருள் ஈட்டுதற்கருவியாவது யாதென ஆராயலானார். உலகியல் வாழ்க்கைக்கு முதலதான உணவுப் பொருளைத் தரும் உழவுதொழிலே எல்லாத் தொழில்களினுஞ் சிறந்ததென முடிவுகண்டுரைத்தாராயினும், உழவினைச் செய்யுங்கால் ஓரறிவுயிர்களான பல்வகைப் புற்பூண்டுகளுங் களைந்தெறியப்படுதலானும், ஈரறிவுயிர்களான நத்தை கிளிஞ்சில் முதலியன நசுக்குண்டு இறத்தலானும், மூவறிவுயிர்களான எறும்பும் அட்டையும் மிதியுண்டு அழிதலானும், நான்கறிவுயிரான நண்டும் ஐயறிவுயிர்களான மலங்கும் பாம்பும் ஏரின்கொழுவாற் கிழிவுண்டு மாய்தலானுங், கொல்லா அறத்தினையே முதலறமாய்க் கைக்கொண்ட தமக்கு அவ்வுழவு தொழில் ஆகாமையினை ஆய்ந்துணர்ந்தார்.

இனி, ஓர் அரசன் கீழாயினும் ஒரு பெருஞ்செல்வரை அடுத்தாயினும் ஒருதொழில் புரிந்து பொருள் ஈட்டலாமெனின், அவர் ஏவிய வழியன்றித், தமக்கென ஓர் அறிவுந் தமக்கென ஒருசெயலும் இல்லா ஒரு மரப்பாவைபோல் இயங்கி, எந்நேரமும் அச்சத்திலுங் கவலையிலும் ஓய்வின்றி வாழ்நாட் கழிக்கவேண்டி வருமாகலின், அதுவுந் தமக்கு ஆகாதென உணர்ந்தார். இவரது மனநிலை இன்னதாதல்,

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்'' என்றும்,
''என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை'' என்றும் அவர் அருளிச்

செய்த திருக்குறட் பாக்களால் இனிதறியப்படும்.

இனிப், பல்பண்டங்களை விலைகொண்டு விற்கும் வாணிக வாழ்க்கையை நடாத்திப் பொருள் பெறலாமெனின், எந்நேரமும் உயர்ந்த பொருட்பயன் ஆராய்தலினுந், தமக்கு முன்னிருந்த சான்றோர் அருளிய நூல்களைப் பயிறலினும், அவற்றைப் பயின்றதன் பயனாக எல்லா அறிவும் எல்லா முதன்மையும் ஒருங்குடைய இறைவன் திருவடிகளை ஓவாது தொழும் அருந்தவப் பயிற்சி செய்தலினுங் கருத்து ஈடுபட்டு நிற்குந் தமக்குப், பலநாடு சென்று பல பண்டங்கள் தேடிக்கொணர்ந்து விற்கும் வாணிக வாழ்க்கையும் ஆகாதென நன்குணர்ந்தார். மேலும், வாணிகம் நடாத்துதலிற், பிறருடைய பொருளைத் தம்பொருள்போற் கருதும் நடுவுநிலை வாய்த்தலும் அரிதெனக் கண்டார். இவரது மனப்பான்மை இப்பெற்றியதாதல்,

''நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று'' எனவுங்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" எனவுங்,
"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" எனவுங்,
"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" எனவும்,
"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்" எனவும் அவர் அருளிச்செய்தவாற்றால் நன்கறியப்படும்.

ஆகவே, நாயனார் தமதில்லற வாழ்க்கையைச் சுருங்கிய செலவில் ஆரவாரமின்றி நடத்தினாற், பொருள் வருவாயை மிகுதியாக நாடவேண்டுவதில்லை யெனவும், பொருள் வருவாயை மிகுதியாக நாடாதபோது வாணிகஞ்செய்தலும் பெருஞ் செல்வரின்கீழ் ஊழியஞ் செய்தலும் வேண்டாவெனவும் முடிவுசெய்தார்; இஃது,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லைப்
போகா றகலாக் கடை" என அவரருளிச்செய்த திருக்குறட் செய்யுளால் இனிது விளங்காநிற்கின்றது.

இவ்வாறாக ஊழியமும் வாணிகமுந் தமக்குஆகா எனக் கண்டபின், தமதுஎளியவாழ்க்கைக்கு இசைவதாவது, ஆடைநெய்துவிற்று, அதில்வருஞ் சிறியதோர் ஊதியங்கொண்டு தாமுந் தம்மனைவியாரும் இல்லறம் நடாத்துதலேயாம் என முடிவு செய்தார். இங்ஙனம் முடிவு செய்தபின், நாடோறும் 'ஏலேலசிங்கர்' என்னும் வணிகர்பாற் சென்று, அவரிடமிருந்து ஐந்து பணத்திற்கு நூல்வாங்கி அதனை ஆடையாகநெய்து, தமது அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு வேண்டிய அளவு அதனை ஊதியத்துக்குவிற்று, ஊதியத்தை மனைச்செலவுக்கும், மிச்சம் ஐந்து பணத்தை அடுத்தநாள் நூல்வாங்குதற்கு முதலுமாக வைத்துக், தம் அருமை மனைவியாருடன் காதலன்பிற் றிளைத்தபடியே, தமது அருந்தவ

வொழுக்கத்தைப் பொருந்துமுறையில் ஆற்றிவந்தார். நாயனார் செய்தது நெய்தற் றொழிலேயென்பது,

"பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவியளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடும் ஏழையறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"

என்னும் இவரது தனிச்செய்யுளினால் அறியப்படும்; இச்செய்யுள் **தமிழ்நாவலர் சரிதையிற்** காணப்படுகின்றது.

இங்ஙனம் இல்லறம் என்னுந் தீம்புனல்யாறு ஒருபுறமுந், துறவறம் என்னுந் தண்புனல்யாறு மற்றொருபுறமும் வந்துநிறையும் ஒரு மலர்வாவிபோல, நாயனார் இருவகை யொழுக்கமும் ஒருவகையிற்கொண்டு தமக்கும் பிறர்க்கும் பெரிதும் பயன்படுத லுடையராய் வாழ்ந்து வரலானார். அதனோடு அஞ்ஞான்று தமிழிலும் வடமொழியிலும் வழங்கிய அரிய பெரிய நூற்பொருள்களை யெல்லாம் ஆழ்ந்து நுண்ணிதின் ஆராய்ந்தறிந்து கல்விக் கடற்கோர் எல்லையாயும் விளங்கினார் நாயனார். இங்ஙனந்தமிழ்ப் பேராசிரியராய் இவர் விளங்குதலைக் கண்ட கலைவல்லாரெல்லாம், இவர்தந் திருவடிகளை அடைந்து இவர் அறிவுறுக்கும் அரும்பொருள் அறிவுரைகளைச் செவியாரப் பருகித், தம்முளத்தை அவ்வறிவுப் பேரமிழ்திற் றோய்விக்கும் விழைவு பெரிதுடையராய்க் குழுமினார். அதனால், தவப்பெருந்தலைவரான நாயனார், மக்களுயிர்க்கு இம்மை மறுமையில் உறுதி பயப்பவான ஒவ்வொரு பொருளினையும், பாலைத் துழவித் துழவிக் காய்ச்சி அதன் பரப்பனைத்தினையுஞ் சுருங்கத் திரட்டி மாற்றுயர்ந்த ஒருசிறு பொன்வள்ளத்தில் நிறையவைத்தாலென்ன, மிகச்சில விழுமியசொற்களால் மிகச்சிறிதாய் நறுவிதாய் அமைத்த குறட்பாவிற் செறித்து, அங்ஙனஞ் செறித்த அவ் வரும்பெரும்

பொருளை யெல்லாந், தம்மை யணுகிய மாணாக்கர்க்கு உளங்கொளத் தேக்கும் பேருதவியினைச் செய்து வரலானார்.

பிறரெல்லாம் எண்ணுவதொன்றுஞ் சொல்லுவது மற்றொன்றுஞ் செய்வது பிறிதொன்றுமாகத் தாமே தம்மிற் பெரிதும் முரணிநிற்பர். அங்ஙனந் தாமே முரணிநிற்றலால், அவரெல்லாந் தமது வாழ்க்கையினைச் செவ்வனே நடத்தமாட்டாமற் றாம் பெரிதுந் துன்புறுதலுடன், தம்மைச் சார்ந்தாரத்தனைபேரும் மிக்க துன்பத்தினை எய்துமாறுஞ் செய்வர். மற்று, நாயனாரோ தாம் நன்குஆராய்ந்து நினைந்ததனையே பிறர்க்குஞ் சொல்லினர்; தாமுஞ் செய்தனர். நாயனார் அறங்களுள் மிகச் சிறந்ததெனத் தெளிந்தது ஒருயிரையுங் கொலைசெய்யாத கொல்லா அறமே யாம்; தாங் கண்ட அவ்வுண்மையினையே,

“ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று” என்று தாம் அருளிச்செய்த திருக்குறளிலும் பலரறியச் சொல்லினர். அங்ஙனஞ் சொல்லியதற் கேற்பவே, உயிரழிவுக் கிடமான மற்றைத் தொழில்களெல்லாஞ் செய்தலைவிட்டு, உயிரழிவுக்கு இடமில்லா நெய்தற்றொழிலையே செய்துபோந்தனர்.

இனிக், கொல்லாமைக்கு அடுத்தபடியிலே நாயனார் சிறந்த அறமெனக் கொண்டது பொய் கூறாமையே யாம். வாணிகஞ் செய்தலில் எங்ஙனமேனும் பொய் வந்து நுழையுமாதலால், அது செய்தற்குத் தமதுளம் ஒருப்படாராய்த் தாம் அன்றாடம் நெய்த ஆடையினை விலைசெய்து பெற்ற சிறுபொருள் கொண்டே தமது வாழ்க்கையினை வளனுற நடாத்திவந்தார். இவர் இவ்வாறு சிறிய வருவாய்ப் பொருள்கொண்டு மனையறம் நடாத்துதற்கு, இவர்தம் மனைவியார் மிகவும் மனம்

ஒத்து நடந்தவராகல் வேண்டும்; இல்லையானால், நாயனார் தாங்கண்ட அறநெறியிற் செல்லுதல் இயலாது.

பார்மின்! இஞ்ஞான்றை மாதரார் பொற்சரிகை மிடைந்த பட்டாடை உடுப்பதிலுங், கதிரொளி மிளிரும் மணிக்கலன் பூண்பதிலும், அறுசுவைமிக்க நொறுவைகள் உண்பதிலும், நறுமலர் புழுகு நாளும் அணிதலிலும், நாடகக் காட்சியும் நகைச்சுவைப் பாட்டும் நாடோறுங் கண்டு கேட்டுக் களிப்பதிலும் அடங்கா வேட்கையுடையராய்த், தங்கணவரின் வருவாய்க் குறையினைச் சிறிதுங் கருதிப்பாராது, அவரைப் பெரும்பொருள் கொணரும்படி ஓவாது வருத்தி வருகின்றனர்! அதனால், ஆடவரிற்பலர், தீதும் பழியும் பாராது. தமது தகுதிக்கும் நிலைக்கும் ஏற்ப வரும் வருவாய்ப் பொருளளவில் அமைதிபெறாது, வரம்பு கடந்து சென்று, பிறரை ஏழை எளியரென்றும் நினையாது பல வகையால் நெருக்கி, அவரிடமிருந்து பிழிந்தெடுப்பதுபோல் எடுத்துப் பெற்ற தொகைகொண்டு தம்மனைவியர் வேண்டுமாறெல்லாம் நடந்து அவரை உவப்பிக்கின்றனர்! இவ்வாறு தொடர்பாகத் தீநெறியிற் பொருள் தொகுக்கும் இவர்கள், தமக்கு மேலுள்ள தலைவர்களால் தமது குற்றங் கண்டு பிடிக்கப்பட்டுச் சிறையிடப்படுதலும் உண்டு; அதற்குத் தப்பினால் தம்மாற் பெரிதுந் துன்புறுத்தப் படுங் குடிமக்களிற் றீயராற் கொலை செய்யப்படுதலும் உண்டு; அதற்குந் தப்பினால் அச்சத்தாலுங் கவலையாலும் ஓயாமுயற்சியாலும் உள்ளம்வெந்து, என்புருக்கி நோய் முதலியன கொண்டு, ஆற்றொணாத் துன்புழந்து காலம் முதிராமுன்னரே மாய்தலும் உண்டு. எவ்வாறேனும் பிறன் கைப்பொருளை வெஃகி அறனல்ல செய்பவர் கெட்டொழிதல் திண்ணம்; அவரேயன்றி அவரது குடிமுழுதும் மாயுமென்பதனையும் நாயனாரே,

"நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்" என்று அருளிச் செய்திருக்கின்றார். இங்ஙனமாக, ஆடவர்தந் தீவினைக்கு அவர் தம் மனைவியரின் அடங்காப் பேராவாவே காரணமாயிருத்தலால், அவர்தம், நல்வினைக்கும் அவர்தம் அவாவின்மையே காரணமாயிருக்கின்றது. இவ்வுண்மையினை நாயனாரே,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்றும்,

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" என்றும்,

"இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை" என்றும் நன்குவிளக்கியிருத்தல் காண்க. இங்கே கூறியதுகொண்டு மகளிரெல்லாருந், திருவள்ளுவரின் மனைவியாரைப் போல், மிக்க எளிய நிலையிலேயே காலங் கழிக்கவேண்டுமென்பது எமது கருத்தாகக் கொள்ளற்க. மகளிராவார் தங் கணவரின் வருவாய்க்குத் தக்கபடியாகவுந், தங் குடும்பத்தின் செல்வநிலைக்குத் தக்கபடியாகவும், உயர்ந்த முறையிலோ, அன்றி நடுவானமுறையிலோ, அன்றி எளிய நிலையிலோ மனப்புழுக்கமின்றித் தங்கொழுநரோடு ஒத்து வாழ்க்கை செலுத்தல் வேண்டுமென்பதே எமதுகருத்தாவதாம். தீதின்றி வந்தபெரும்பொருள் உளதாயின், அதனைக் கற்றார்க்கும் வறியார்க்கும் ஏழைமக்கட்குங் கொடுத் துதவிசெய்வதுடன், தாமும் உயர்ந்த முறையில் ஐம்புலநுகர்தலிற் குற்றம் ஏதும் இல்லை. பெருஞ்செல்வர் செயல் இங்ஙன நடைபெறற்பாலதென்பதனை நாயனாரே,

"வைத்தான்வாய்சான்ற பெரும்பொருள் அஃதுண்
செத்தான் செயக்கிடந்த தில்" எனவும், [ணான்

புரிந்துகொண்டிருப்போர்க்குப் பின்னேயிருந்து குண்டுகள் வந்து விழுந்தன; இந்நேரத்திற் கள்வர் இருவர் முன்னை காற்றினுங் கடுகிவந்து இருளனை நோக்கி 'உன்னைக்காப்பாற்றிக் கொள்'' என்றனர்.

மின்னல் வீச்சுப்போல் இருளன் குதிரை அப்புறந்துள்ளிப்பாய்ந்து போயிற்று; அதேநேரத்தில் நீலலோசனன் துப்பாக்கியினின்று புறப்பட்ட குண்டுகள் முறிபட்டுப் பறந்தோடுங் கள்வன் காதோரமாய்க் கிறுகிறுவென்று சுழன்றுபோயின. பறந்தோடின இருளன் இருநூறு முழம் எட்டிப்போனவுடனே தன் குதிரையைநிறுத்தி இப்புறந்திருப்பி முதுகிற் றொங்க விட்டிருந்த கைத்துப்பாக்கியினை அவிழ்க்கத் தொடங்கினான். நீலலோசனன் கூரிய கண்களுக்கு இதுதெரிந்தவுடனே, மலைநாட்டுக்கள்வர் குறி பிழையாமற்சுடுவதிற் கைதேர்ந்தவர்களென்பதனை உணர்ந்து, தான் அப்பகைவன் குண்டுக்கு இலக்காய் அகப்படாமல், தன் குதிரையைமுடுக்கிக் குறுங்காட்டினுள்ளே புகுந்துபோய்த்தப்பினான். இவன் இங்ஙனந் திரும்பிவந்தவுடனே துப்பாக்கிக் குண்டுகள் இவன் பின்னே அருகிற் கிறுகிறுவென்று சுழன்று சென்றன. இருளன் தானெடுத்த துணிவுச்செயல் முற்றுந்தப்பிப்போய்விட்டதை அறிந்து குதிரையைத் திருப்பிக்கொண்டு விரைந்துபோயினான்.

இதற்குமுன்னமே நீலலோசனன், தன்பின்வந்த காவலாளரும் அவரைத்தாக்கிய கள்வர்நால்வரும் எங்ஙனமாயினர் என்பதனை ஓர் இமைப்பொழுதில் அறிந்துகொண்டனன்; இப்போது அச்சண்டையின் முடிவைச் செவ்வையாக அளந்தறிவதற்கு ஒழிவுநேரம் வாய்த்தது. கள்வர் அறுவரில் இருவர் அப்பொளத்த இளைஞனை மறித்தனர்; இவ்விருவரில் ஒருவன் சுடப்பட்டு விழுந்திறந்தான்; மற்றையோன் பிழைத்தோடிப் போயினான். காவலாளர்இருவரையுந் தாக்கிய கள்வர் நால்வரில், இருவர் தலையிற் சுடப்பட்டு உயிர் ஒழிந்து நிலத்திற் கிடந்தனர். மற்றிருவரில், ஒருவன் கத்திவெட்டினால் வாளேந்திய தோல்வலிகெட்டும், மற்றொருவன் கழுத்து முள்ளெலும்பு தகர்ந்துங் கடுங்காயம் உற்று எதிர்நிற்கலாற்றாது முன்னே சொன்னவாறாய் ஓடிப்போயினர். ஆகையால், நீலலோசனன் காவலாளருந் தந்தலைவனைப் போலவே வெற்றி மறஞ் சிறந்து விளங்கினர். ஆயினும், இவர்களில் ஒருவனுக்குமட்டும் இடது தோட்புறத்துச் சதையில் வாள்அழுந்து வெட்டுக்காயஞ் சிறிது இருந்ததொன்றைத்தவிர, மற்று அவர்கள் இச்சண்டையின் விளைவைப் பற்றித் தம் தலைவனுடன் கூடி மகிழ்தற்கு இடம் பெற்றவராயினர்.

கொல்லப்பட்ட கள்வர் மூவருடைய குதிரைகளும் இவர்கள் கட்பார்வைக்கு அகப்படாமல் அவ்விடத்தை விட்டு அகன்று ஓடிப்போய் விட்டன. நீலலோசனனும் அவன் காவலாளரும் வழிநடுவிற் கிடந்த அப்பிணங்களை அகற்றிக் கொடிமுந்திரிப் பந்தர் நிழற்கீழ்க் கிடத்தி விட்டுச்

நாம்போம் வழியிற் செல்வாராயினர். செல்லும்போது இங்ஙனம் வந்து வழி மறித்தவர்கள் முடிவான நோக்கமேதுமின்றிக் கொள்ளையிடுதலையே குறிப்பாகவுடைய ஆறலை கள்வர் கூட்டத்திற் சேர்ந்தவர்கள் என்று நம்பினர்.

அப்போது நீலலோசனன் அவரைப்பார்த்து, "என்றாலும் அக் கொடியகள்வர் குறுங்காட்டில் மறைந்திருந்தபடியே நம்மைச்சுடாமல் எதிரேறிவந்து போரிட்டது எனக்கு மிகவும் புதுமையாய் இருக்கின்றது. அப்படி அவர்கள் சுட்டிருந்தால் நாமெல்லாம் உயிரிழந்திருப்போம். மலைநாட்டுக்கள்வர் குறிதவறாமற் சுடுவதில் மிகவும் வல்லரென்பதில் ஐயம் இல்லையன்றோ" என்று கூறினான்.

அதைக்கேட்டதும், அடர்ந்து நரைத்துப்போன தாடியும், ஆண்மை மனவுறுதி அருள் முதலிய இயல்புகள் அவன்றன் இனத்தாரின் அடையாளமாய்க் கலந்து விளங்குகின்ற முகமும், தடித்துத் திணிந்த உடம்பும் உடையவனான மூத்தகாவலாளன், "எங்கள் அரசின் செல்வமே, நம் மிடத்துள்ளவைகளை யெல்லாங் கொள்ளை கொள்வதுமட்டுமே யன்றி, நம்மைச் சிறைபாகப் பிடித்துக் கொண்டுபோய்த் தம் மலைஅரணில் வைத்திருந்து விடுதலை பெறும் பொருட்டுப் பெருந்தொகையான பொருளும் அடையலாம் என்கின்ற முதன்மையான நோக்கத்தோடும் அவர்கள் நம்மை எதிர்த்தவர்களாகக் காணப்படுகின்றனர்." என்றனன்.

அதற்கு நீலலோசனன், "என் நம்பகமுள்ள கேசரிவீர நீ எண்ணிச் சொல்லியது எனக்குப்பொருத்தமாகத் தோன்றுகின்றது. அம்மறவர் எண்ணங்கிட்டது அங்ஙனமாயின் அவர்தோல்வியடைந்ததும் நாம் வெற்றியடைந்ததும் அவர்களுடைய அவ் ஏற்பாட்டினால் அல்லவா? அவர்கள் முதலிலேயே துப்பாக்கிகளை எடுத்துவழங்காமற் கிட்டவந்து எதிர்த்து நீலகிரி நாட்டார்க்குரிய வலிமையினையுங் குடகுநாட்டார்க்குரிய வலிமையினையும் ஆராய்ந்து அறிந்து கொண்டனர்" என்றுகூறினான்.

அதுகேட்ட இளையகாவலாளனான வியாக்கிரவீரன், "எங்கள் அரசுரிமைச் செல்வமே, முதன்முதற் பின்முதுகுகாட்டியோடின பழிகாரர் இருவருந் தங்களால் ஒன்றுஞ்சாயாது என்று கண்டவுடனே துப்பாக்கியை எடுத்துச் சுட்டனர்; என் சொற்படியெல்லாம் யான் உந்துமாறெல்லாம் வட்டமாய்த் திரிந்தும் முன்னோடியும் பின்னோடியும் நடக்கின்ற என் குதிரையின் திறமையாலன்றோ தங்கள் உண்மையுள்ள ஊழியக்காரனான அடியேன் தப்பிப்பிழைத்துத் தங்களோடு இப்போது பேசிக்கொண்டிருக்கின்றேன்!" என்றனன்.

என்றதுங் கேசரிவீரன், "என் காதருகிலும் விசைக்காற்று விறுவிறுவென்று வீசுதல்போலக் குண்டுகள் சுழன்றுபோயின. அது கிடக்க, நாம் கௌதமசாக்கியரை வணங்குவேமாக! வெற்றி நம்பக்கமாயிற்று. வியாக்கிரவீரன் தோளில் வாள் கிறியது ஒன்று தவிர, நாம் வேறோர் இடையூறுமின்றி வந்து சேர்ந்தமை வியப்பேயாம்." என்று மொழிந்தான்.

இங்ஙனம் பேசிக்கொண்டே நீலலோசனனும் அவன் காவலாளரும் வழிபிடித்துப் போயினர்; அரசிளைஞனும் இப்போது தன்காவலாளருடன் சேர்ந்துபோயினன்; மற்றொருமுறையும் வழிமறித்தல் நேரிடுவதாயின் அதற்கு உடனே கையாளுதற்பொருட்டு மூவருந் துப்பாக்கியை மருந்திட்டு இடித்து ஏந்திச்சென்றனர்.

செல்லும்போது சிறிதுநேரங்கழித்துக் கேசரிவீரன், "எங்கள் அரசே, நம்மைவழிமறித்தவர்கள், சோழநாட்டார்க்கும் மலைநாட்டார்க்குஞ் சிலகாலமாய்ப் பெரியதோர் அச்சத்தினை யுண்டுபண்ணிவருங் கள்வர் தலைவனைச் சேர்ந்தவராயிருக்கலாம் என்பது தங்களுக்குத் தோன்றவில்லையா?" என்று கேட்டனன்.

அதற்குநீலலோசனன், 'நல்லானைக் குறிப்பிக்கின்றனையோ? ஆம், அவனைப்பற்றிப் புதுபுதுக்கதைகள் இந்நீலகிரி மலைசாரலெல்லையைத் தாண்டிக் குடகிலிருக்கும் நம்முடைய செவிகளுக்கும் எட்டுகின்றன: உனக்கு உண்மையைச் சொல்லுகின்றேன், நான் அந்தக் கதைகளை வெறும்பேச்சாகவே நினைக்கின்றேன். நல்லான் என்னும் ஓர் ஆளே உண்டென்பது பெருங் கட்டு. அவன் ஒரு மனப்பேய்தான்" என்றனன்.

"எங்கள் தலைவ, நல்லான் என்பது கட்டாயிருக்கலாம். மிகச்சிலரான வழித்துணைவரோடு நீங்கள் நன்றாய்ப் போகலாமென்று கூறப்பட்ட உறுதிமொழிக்கும் மாறாகச் சென்ற இரண்டொரு நாழிகை நிகழ்ச்சியினாலேயே இப்பக்கங்களிற் படைக்கலம் பூண்டவரான ஆறலைகள்வர் கூட்டம் உண்டென்பது நமக்குப்புலப்படவில்லையா?" என்றுகேசரிவீரன் வினவினன்.

அதற்குநீலலோசனன், "இங்ஙனம் பயணஞ் செய்யும்படி என்னைத் தூண்டுதல்செய்த ஒருசெய்தி கொண்டுவந்தவனான அந்தமலைநாட்டு இளைஞன்றான் அங்ஙனம் உறுதியுரை மொழிந்தான். அவன் தான் மெய்யென்று நம்பினதையே கூறினான் போலும்! அதுவேயுமன்றி, நான்செல்வதைப் பிறர்உற்றுப்பாராதபடி அன்றோ பயணஞ்செய்யும்படி கற்பிக்கப்பட்டேன். ஆ! அதோஎதிரே ஒருகுடிசை தோன்றுகின்றது! நாம்அங்கே கடுகச் சென்று, அங்குள்ளோர்க்கு இங்கே நிகழ்ந்தனயாவுந் தெரிவிப்பேம். அவர்கள், நாம் வழியண்டையிலே கிடத்திவந்த பிணங்களை அப்புறப் படுத்துவதற்கு வேண்டுவது ஏதேனுந் தாமே செய்வர்." என்று கூறினான்.

அப்படியே அம்மூவருங் குடிசையண்டை போய்ச் சேர்ந்தனர்; அங்கிருந்த முதியோன் ஒருவனுக்கு நிகழ்ந்தனவெல்லாஞ் சொல்லப்

பட்டன. நல்லான் நடத்தும் ஆறலைதொழில்கள் இனிது நடைபெறுகின்ற மேற்கணவாய் மலைச்சாரலையடுத்த இடங்களுக்கு நெடுந்தொலைவிலே இங்ஙனம் வழிமறிப்பு நேர்ந்ததைப்பற்றி அவன் மிகவும் வியப்படைந்தவன் போற் காணப்பட்டான். அதனொடு, மூன்றுபௌத்தரால் மிகவலியரான ஆறு கள்வர் முற்றும் முறியடிக்கப்பட்டதனைப்பற்றி அவன் பின்னும் மிகுந்தவியப்படைந்து, அவர்கள்சொற்களில் நம்பிக்கையற்றவனாய்க் காணப்படவே, சொல்லப்பட்ட அக்கொடிய கள்வர் அறுவர் உடம்பும் பிணமாய் வழியிற்கிடத்தலைக் காணலாம் என்று அவர்கள் அவனுக்கு உறுதியுரைதந்தனர்.

இங்ஙனம் மலைநாட்டுக்காவற்றலைவர்களுக்குத் தாஞ்செய்ய வேண்டுங் கடமையைச் செய்துவிட்டுச் சிலநேரம் அக்குடிசையில் விடுதிகொண்டபின், நீலலோசனன் தன் துணைவர் இருவரும் பின்னேவர வழிபிடித்துப் போயினான். இக்காவலாளர் இருவரும் வெறிதே ஊழியக்காரர் அல்லர். நீலலோசனன் சிறந்த மன்னவன் ஆகையால், அவனுடன் வந்த இவர்கள் செல்வர் என்று அறிதல்வேண்டும்.

இங்கே இவ்வரசிளைஞன் கேசரிவீரன் வியாக்கிரவீரன் என்னும் இருவருடனும் வழிப்போய்க் கொண்டிருக்கும்போது, நமக்கு நல்ல நேரம் வாய்த்தமையால் அவன் உடம்பின் தோற்றத்தைப்பற்றி இன்னுஞ் சிலசொற்கள் சொல்ல விரும்புகின்றேம். இவன் மிகவும் அழகாயிருந்தான் என்று முன்னமே சொன்னோம். இவனுக்குக்கரிய குஞ்சியுங் கரியவிழிகளும் இருந்தன; இவன் மீசையானது, துகிலிகையால் நேர்த்தியாய் வளைந்தவாறுபோலப் பளபளப்பாய் முனைசுருண்டு மேலுதட்டின்மேற் கவிந்திருந்தது; இவனது மூக்குக் கழுகுபோற் சிறிதே நுனியில் வளைந்திருந்தது; ஆனாலும், இதுவும் முகத்தில் உள்ள மற்றை உறுப்புகளும் சிறிது மெல்லிய தன்மையுடையவாய் அமைந்திருந்தன. இவன் உடம்பின் நிறம் பெரும்பாலார்க்கு உள்ளதுபோலக் கரியதாயில்லை; ஆயினும், ஞாயிற்றின் வெப்பத்தாற் சிறிது பழுப்பு வண்ணமாய்த் தோன்றுதலின், இவனுடைய நிறம் இளமையுருவிற் சிறிது ஆண்மைத் தன்மை காட்டிற்று. இல்லாவிட்டால், இவன்நிறம் இன்னுந்தெளிவாய் இளமைப்பருவத்திற்கு இசைந்ததாய்விளங்கும். இவ்வாறு உடம்பின் நிறம் பழுப்பாய்த் தோன்றுதற்குக் காரணம், ஆண்பாலார்க்குரிய வேட்டையாடுதலிலும் வேறுபயிற்சிகளிலும் இவன் மிகுந்த விருப்பமுடையோனாய்ப் பகற்காலங்களில் திரிவதொன்றே என்பது தோன்றுகின்றது. வேட்டையாடுவதிலுங் குதிரையேற்றத்திலும் இவன் நிரம்பிய துணிவுந் திறமையும் வாய்ந்திருந்தனன். சிறிதுநேரத்திற்கு முன்னே வந்து வழிமறித்த கள்வர்களை அஞ்சாது, இவன் அவர்களைப்புறங்கண்டு வெற்றிசிறந்து விளங்கினதைப்போலவே, இன்னுங்கடுமையான போர்

முகங்களிலெல்லாம் அங்ஙனமே மறஞ்சிறந்து திகழ்ந்தனன். இவனிடத்துப் பொறுமையும் இரக்கமுங் குடிகொண்டிருந்தன; இன்னும், இவனது நடையில் ஆண்டன்மையொடுகூடிய ஒரு பெருந்தகைமை சிறந்து காட்டுவதாயிற்று. அச்சம் என்பதனை இவன் அறியவேமாட்டான்; இடர்என்கின்ற சொல்லைக் கேட்பினும் நகையாடுவான். இவ்வியல்பினனேனுந், தன்போன்ற ஓர் உயிர் வருந்துதலைக் காணினும், ஒருயிர் துன்புற்றகதையைக் கேட்பினும் இவன்கண்களில் நீர் முத்துமுத்தாய்த் துளிக்கும்.

இவனுக்கு இப்போது இருபத்தோராண்டு இருக்கலாம். இவனுடம்பு உயர்ந்து பூங்கொம்புபோல் மெல்லிதாயுந், திருந்திய அமைப்புடையதாயும், மதனவேள்போலக் கைகால்முதலான உறுப்புகள் நீளமாயுந் துவண்டன. வழுவழுப்பான வெள்ளைச் சலவைக்கல்லில் இவன் உடம்பின் உறுப்புகளைப் பார்வையாகவைத்து உளியாற்செதுக்கி இழைத்து ஒருபாவை அமைக்கப்படுமாயின் அது வழுவற்றஆண்டன்மையினைக் குறிக்கும் வடிவமாய் நிலைபெறுமென்பது திண்ணமேயாம். அவனதுநெற்றி அகன்று மேன்மையாய்விளங்கிற்று; தடிப்பின்றி மிக மெலிந்துவளைந்த இவனுடைய புருவங்கள் கரியவாய் இருந்தன. கண்ணிறைப்பை செவ்வையாகத் திறந்திருந்தன; விழிகள் டருமனாய் இமைகளிற் பெண்பாலார்க்கிருப்பதுபோற் கருகியடர்ந்த மயிர்வரிசையும் வாய்ந்திருந்தன; தன்னைஉயர்த்திப் பிறரைத்தாழ்த்தும் இறுமாப்பு, செருக்கடைதல், தறுகண்மை, எண்ணிப்பாராததுணிவு என்னுந் தீயஇயல்புகள் இவனிடத்து ஒருசிறிதும் இல்லை. ஆயினும், ஆண்டன்மையும் போர்முகத்து அஞ்சாமையும் என்கின்ற உயர்ந்த இயல்புகள் வாய்க்கப்பெற்ற இளைஞர்க்குத் தம்உயர்வு தாமேயறியும் ஓர்உணர்ச்சியுந் தற்றுணிவும் இயற்கையாக உண்டாதல்போல இவனிடத்தும் இப்பெற்றிப்பட்டதோர் உணர்ச்சி தோன்றுதல்உண்டு. இவன் கன்னமீசை வைத்திராவிடினும், மேல்இதழில் உள்ள கரியமீசையும், எலுமிச்சம்பழத்தைவிடச் சிறிதுபழுப்பாகத்தோன்றும் மேனியின்நிறமும், எதற்கும் அஞ்சாத கண்களின் நோக்கமும் இவன்முகத்தின்கண் ஓர்ஆண்டன்மை விளங்கத் தோற்றுவித்தன.

இளைஞனை நீலலோசனன் இங்ஙனம் பேரழகுடையனாய்த் திகழ்ந்தனன். இவன்உடுத்திருந்த உடைகளை நோக்குமிடத்து அக்காலத்து அரசர்வழக்கப்படியே அணிந்திருந்தனன் என்பது தோன்றிற்று. ஓரங்களிலும், மார்பின்புறத்திலும் முன்கையிலும் பூத்தொழில்செய்யப்பட்ட பொற்சரிகை பின்னப்பட்டு இருண்டபச்சைநிறமுடைய சட்டை மினுமினுவென்று மினிர்ந்து இவனதுவடிவழகை இனிதுவிளங்கக்காட்டிற்று. இவன் அரையின்கீழ்ப் பூண்டிருந்த காற்சட்டையில் நீளத்தைத்

திருந்த பொற்பட்டையினால் அரைக்கீழுள்ள உறுப்புகள் கிளர்ச்சிமிக்க குதிரையை அழகாய் அஞ்சாமல் நடாத்தும்போது மிகவுந்திருந்திய இலக்கணம்வாய்ந்து தோன்றின. இவன் தொங்கவிட்டிருந்த கொடுவாளுறை நாம் முன் மொழிந்தபடியே பொன்மினுக்குப் பூசப்பட்டிருந்தது. அதன்பிடியில் உயர்ந்த முழுமணிகள் அழுத்தப்பட்டிருந்தன. குதிரை மேற்போர்வையிற் பொற்சரிகையினால் அழகிய உருக்கள் பின்னப்பட்டு விளங்கின. எவ்வாற்றானும் ஆண்டன்மை இனிதுதோன்றக் குதிரை மேல்வரும் இளையநீலலோசனனது அழகியஉருவமானது, அம்மலை நாட்டு அழகிய இளமகளிர் அவன்செல்வதைப் பார்க்கும்பொருட்டுத் தங் குடிசைகளினின்றும் புறம்வந்து நோக்குகையில் அவர்தங் கண்ணையுங் கருத்தையுங் கவருந்தன்மையதாய் இருந்தது; இவனைப்பார்த்த அம்மலை நாட்டு ஆடவரோ இவ்விளைஞன் குதிரைமேல் அமர்ந்துவரும் எளிதான நிலையினையும் ஆண்டகைமையினையும் வியந்துநோக்கி, அவனைத்தாங்கிய குதிரையின்சிறந்த உறுப்பின் அமைவையும் உற்றுப்பார்த்து மகிழ்ந்தனர். இங்ஙனம் இவன்வருகையில் இவனுடன் பின்வருவோர் இருவரே யாயினும், இவன் உருவத்தோற்றமானது அங்குள்ளார் கருத்தையெல் லாம் இவன்பால் இழுத்தது.

இவனும் வழிதொடர்ந்துபோன வண்ணமாய் இருந்தனன்; இவ்வாறு பலநாழிகைகடந்தன. தானுந் தன்காவலரும் இடையிடையே தங்கி இளைப்பாறிக் குதிரைகளுக்குந் தீனிகொடுத்துக்கொண்டு கடைசியாக மூன்றுவழிகள்பிரியும் ஓரிடத்தில் வந்து சேர்ந்தனன். இப்போது அவர்கள் எந்தவழியிற் செல்வதென்று திகைத்தனர்; இம்மூன்றில் எது நேராக நீலகிரி நகரத்திற்குச் செல்லுகின்ற தென்பதைக்கேட்டு அறியும் பொருட்டு அருகாமையில் ஏதேனுங்குடிசைவீடு இருக்கின்றதாவெனச் சுற்றிநோக்கினர். அப்பொழுது தனக்குச் சிறிதுதொலைவில் ஒருகரை மேற் கிழவனொருவனிருப்பதை நீலலோசனன் கண்டான். இக்கிழவன் அம்மலைநாட்டில் தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்க்குரிய முறைப்பானஉடை கட்டியிருந்தான்; பணிசெய்யப்போம்பொழுது இளைப்பாறுதற்பொருட்டு அங்கேசிறிதுநேரம் இருந்தவனாகக் காணப்பட்டான். இவனைப்பார்த்து வழி எதுவென்றுகேட்ப, அவனுந் தானிருந்தவழியே நேராக நீலகிரி நகரத்திற்குச் செல்லுகின்றதென்று உரைத்தான். உடனே, நீலலோசனன் அவன் முகமாய் ஒருபொற்காசுவீசினன். அந்நாட்டிலுள்ளோர் வறியராதலால் இப்பொற்காசினைக் கண்டவுடன் மிகப்பணிந்து அன்பு தோன்ற அஃதீந்தோனை வாழ்த்துவர். மற்று இக்கிழவனோ அக்காசினை மிகவும்பராமுகமாய் எடுத்துக்கொண்டு அக்காசு தந்த இளைஞனைநோக்கி வெறுப்புடன் சுருக்கமாகச் சில நன்றியுரை கூறியபின், அரசிளைஞனுக்குத் தான் காட்டியவழிக்கு எதிர்முகமாய்ப்போயினான்.

போனவன் சிறிது தொலைவிலுள்ள காட்டினுள்ளே புகுந்து மரத் தொகுதிகளின் நடுவே மறைத்து அமைக்கப்பட்ட ஒரு குடிசையினுள்ளே நுழைந்து, தான் எடுத்துவந்த பொற்காசினை நிலத்தின்மேல் இகழ்ச்சியோடும் வீசியெறிந்து, காரம் மிக்க வெறுப்போடு "ஒருநொடி நேரமாவது என்கொடும் பகைவன் கையினின்றும் இக்காசினைப் பெறும்படி நேர்ந்ததே! அவன் என்னைத் தோற்கஅடித்தனனே! நான் அவனால் தாழ்வடைந்தேனே!" என மிகவருந்திக்கூறினான்.

அப்போது அக்குடிசையிலிருந்த நடுத்தரஆண்டு உடையனான ஒருவன் சினத்துடன் எறியப்பட்ட அக்காசை எடுக்க விரைந்துபோய், "என் நண்பனே, உனக்குயாதுநோய் நேர்ந்தது? ஏன் இங்ஙனம் உரக்க கூவி வருந்துகின்றாய்?" என்று வினவினான்.

அதற்கவன், "அது கிடக்கட்டும். இதோ நீகொடுத்த இக்கோலத்தை நீயே எடுத்துக்கொண்டு, எனக்குரிய உடையினை என்னிடங்கொடுத்து விடு! கூலித்தொழிலாளிக்குரிய இக்கோலத்தினால் யான் ஒரு தொழுத்தைபோல் நடத்தப்பட்டேன். ஆயினும், அச்செருக்குடைய பௌத்த இளைஞன் அக்காசினை வீசியபோதே, அவனைஏமாற்றினேன்! என் முகத்திற் குழப்பித்தடவின இவ்வழுக்கைக் கழுவுதற்கும், இயற்கையிற் கரிய என்மயிரை வெளுக்கச்செய்த இவ்வெள்ளைப்பொடியைப் போக்குதற்கும் எனக்குத் தண்ணீர் கொண்டுவா" என்றான்.

அக்குடிசை வீட்டிற்கு உரியவனான அக்குடியானவன், தான் முன்னறியாத அப்புதியோனைத் தான், "நண்பனே" என்றழைப்பினும், இப்போது வெருக்கொண்டுநோக்கிப் பின் அவன் பராமுகமாய் வீசிய பொற்காசைக் கையில் எடுத்துக்கொண்டு, "எதுவாயிருப்பினும், நீ நினைந்ததொன்றை முடித்தற்கு மேற்கொண்ட இக்கோலம் உனக்குப் பயன்படவில்லையோ?" என்று கேட்டான்.

கேட்டதும், "அது கிடக்கட்டும், எனக்குத் தண்ணீர் கொடு! என் உடைகளையும் படைக்கலங்களையுங் கொண்டுவந்துவை! என் குதிரையைப் பிடித்துவா! யான்பிறந்த மலைநாட்டிற்குப்போய்த் திரும்பவும் நான் இளைப்பாறுதற்கு மிகவிரும்புகின்றேன்" என்று அவன் மறுமொழி புகன்றான்.

அவ்வாறு அவன் விரும்பியபடியே அக்குடிசைக்காரன் யாவுஞ் செய்தானாக, அம்மற்றையோன் தன் முகம் மயிர் முதலியவற்றைக் கழுவிக்கொண்டு, தான் முன் மேலிட்ட குடியானவன் உடுப்புகளைக் களைந்து எறிந்து, தன்னுடைகளை யுடுத்துக் குதிரைமேலேறி மகிழ்ச்சியோடும் விரைந்துபோயினான். இவன் யாரோவெனிற், கள்வனான தருணோதயன்றிப்பிறன் அல்லன்.

இனி இங்ஙனம் பொய்க்கோலத்தில்வந்த குடியானவனால் வழி தவறிச் செல்லுகின்ற நீலலோசனனையும் அவன் துணைவர் இருவரையும் பற்றி உன்னிப்போம்.

"அந்தஆளிடத்தில் அசட்டுத்தனமேயன்றி இன்னும் ஏதோ ஒன்று இருப்பது மாட்சிமை நிறைந்த தங்கட்குத் தோன்றுகின்றதா? அவன்முகத்தில் ஒரு தீக்குறிதோன்றியதென்று நினைத்தேன். அவன் தங்கள் திருமுன்பு விடைசொல்லுகையில் தங்கள் திருமுகத்தை நன்றாய் நோக்காமல் தன் கைக்கோலால் கீழே சிதறிக்கிடந்த கற்களைத் தட்டிக்கொண்டு இருந்தனனே" என்று நுட்ப அறிவினனும் மிக விழிப்பானவனுமான கேசரிவீரன் கூறினான்.

அதற்கு நீலலோசனன் தன் கரிய மீசைமயிரோடு இகலி முத்து வரிசை போன்ற தன் அழகிய பற்கள் பளீரென்று துலங்க நகைத்து "அரண்மனையில் நடைபெறுந் தகவொழுக்கங்களை மலைநாட்டுக் குடியானவன்பாற் காண்டற்கு என் அன்புள்ள கேசரிவீர, நீ எதிர்பார்க்கலாகாது. அவன் நம்மை ஒழுங்கான வழியிற் செலுத்தியிருந்தானாயின், அவனது குறும்பான நடையைப்பற்றிச் சிறிதும் நாம் கவலல் வேண்டாம்" என்றனன்.

அதற்குக் கேசரிவீரன் "நல்லது, அவன் நமக்குச் செவ்வையான வழியைக் காட்டியிருந்தானாயினன்றோ? அஃதின்னுஞ் சிலநாழிகைக்குள் தெரிந்துவிடும். தங்கள் மாட்சிமைநிறைந்த திருமுன்பு பெரிதும் வணக்கமுடையேனாய் யான் நினைத்துக்கூறுவது இது: போகப்போகக் குறுகி இடுக்குவழியாய்ப்போகும் இந்நெறி நீலகிரிநகரத்துக்கு நேரே செல்லும் பெரும்பாட்டையாகச் சிறிதுந் தோன்றவில்லை." என்று விடைபகர்ந்தான்.

வழியும் உண்மையாகவே குறுகலாய்த்தான் இருந்தது; அது குறுகிச் செல்லச்செல்ல அதன் அழகு நிரம்பவும் பொலிவுபெற்று விளங்கிற்று. தலைக்குமேலே ஒன்றோடு ஒன்று பின்னலாய் வளர்ந்திருக்கும் மரங்கள் தண்ணிய நிழலைப்பயந்து வழிச்செல்வார்க்கு ஞாயிற்றின் வெம்மையை மாற்றின. கோடிக்கணக்கான நறுமலர்கள் அக்கரையைக் கவிந்திருந்தன. அவ்வியல்பை நுணுகி நோக்கும்போது, உலகமங்கை தன் மலர்ச்சுமையைத் தாங்கிப்போவதற்கு ஏலாமல் அயர்ச்சியடைந்து அவற்றை அங்கே சொரிந்துவிட்டாற்போலத் தோன்றிற்று; முந்திரிக் கொடிகள் மிகத்தித்திப்பான பழக்குலைகளைச்சுமந்து கிடந்தன; இன்னும் பல்வேறு வகைப்பட்ட இனிய பழங்களும் வழிச்செல்வார்கைக்கு எட்டத்தக்க வகையாய்த் தொங்கிக்கொண்டிருந்தன.

"இந்த நெறிதான் நீலகிரி நகரத்திற்கு நேரே செல்வதாயிருக்க வேண்டுமென உறுதியாய் நம்புகின்றேன். இன்னும் இது போகப்

போக இவ்வாறே அழகிற்சிறந்து தோன்றுமென்று புலப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் நாம் போம்வழியில் யாரேனும் எதிரேவந்தால் அவரைக்கேட்போம், அல்லது ஏதேனும் ஒருகுடிசைவீடு அருகாமையிலிருந்தாலுந் தெரிந்துகொள்வோம்.—அதோ ஒரு சிறிய ஓடை ஓடுஞ் சிற்றொலி கேட்கின்றது! நான் மிகவும் விடாய்கொண்டிருத்தலால் அவ்வொலி எனக்குப் பண் இசைத்தாற்போல் இருக்கின்றது; இங்குள்ள தொழுவிய கொடிமுந்திரிப் பழக்குலைகளை நெருக்கிப் பிழிந்தெடுத்த சாற்றைப் பருகுதலைக்காட்டினும், விடாயினால் வறண்டு உலர்ந்துபோயிருக்கும் என் நாவிற்கு இதன் தூயநீரில் ஒரு குடங்கையளவு முகந்து உண்ணுவது மிகவும் இசைவாயிருக்கும். வாருங்கள்! நாம் முன்னே போய், மொழுமொழுவென்று ஓடும் இவ்வாய்க்காலுக்கு விரைவில் வழி தெரிந்து கொள்வோம்" என்று நீலலோசனன் மொழிந்தான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே நீலலோசனன் தன் குதிரையை விரைந்தநடையிற் செலுத்தச், சிலநேரங்களுள் எல்லாம் அவ்வழி ஓர் அகன்ற இடத்திற் கொண்டுபோய் விட்டது. அதற்குமேல் வேறு வழியும் அங்கே காணப்படவில்லை.

உடனே நீலலோசனன் மிகநெருங்கிய மாஅடர்ப்பின்கீழ்ச் சணலாடையாற் சமைந்த ஒரு கூடாரத்தைக் கண்டு "நாம் வழிதெரிந்து கொள்ளுதற்கு இங்கு யாரேனும் இருப்பர். அதோ ஒருகூடாரம் பார்!" என்றுதன் காவலாளரை நோக்கிக் கூறினான்.

முன்னிலும் இப்போது அவ்வாய்க்காலின் ஓசை மிகவுந் தெளிவாய்க்கேட்டது; நீர் பளிங்குபோல் ஒழுகும் அவ்வருவியின் பக்கத்தேயுள்ள ஓரிடத்தில் நீலலோசனன் சென்றவுடனே, அங்குப் பேரழகாற் சிறந்த ஓர் இளம்பெண் தன்முகமாய்வருங் குதிரைக்குளம்படியின் ஓசையும் அறியாமல் மிகவும் ஆழ்ந்து நினைத்த நினைவினளாய் அமர்ந்திருப்பக் கண்டான்.

மூன்றும் அதிகாரம்.

தெளிநீர்வேலி.

நீலலோசனன் குதிரைக்கடிவாளத்தைப் பிடித்து இழுத்தவாறே அவ்விளம்பெண் முகத்தை விளங்கப்பார்த்துக்கொண்டு நெருங்கிப்போய் அவள்பக்கத்தே சென்று குதிரையை நிறுத்தினான். அவள் உருவத்தின் பேரழகைப்பார்த்துப் பெரிதும் வியப்படைந்தனன். முதல்நொடியில் அவனது அறிவைக் கலக்கிவிட்ட அப்பேரெழில் இப்போது அவன் உள்ளத் தேபையப்பைய நுழைந்து மயக்கிற்று. அவள் அவ்வாய்க்கால் ஓரத்தில்

இருந்தமையால் தன் அடிகளை அதன்நீரிற் கழுவிக்கொண்டிருந்தனள் போலும்! அவள்பக்கத்தே யாழ் என்னும் ஓர்இசைக்கருவி யிருந்தது. அவள்மிகவும் ஆழ்ந்த நினைவிலிருந்தமையால், தன்னைச்சூழவிருந்த அக்கருவியினையும் பிறவற்றையுந் தான் சிறிதும் உன்னித்திலள்.

மிகவுங்கரிய அவள் கூந்தல் தனக்கு இயற்கையிலேயுள்ள வழுவழுப்பினால் விளக்கமுடையதாய், இப்போது ஞாயிற்றின் கதிர்கள் தோய்தலால் மிகமினிர்ந்து கற்றை கற்றையாய் அவிழ்ந்து விரிந்து கிடந்தது. பால்நுரைபோன் மிகமெல்லியதான வெள்ளிய சல்லா மேல் விலகித் தோட்புறத்திற் றொகுக்கப்பட்டுப் பசியபுல்நிலத்தில் தாழவீழ்ந்திருந்தது. மற்றை உறுப்புகளின் அமைப்புக்கு இசையப்பொருந்தித் திருத்தமாகக் கடைந்தெடுத்தனபோல் நீள ஒழுகிக்கிடக்கும் அத்தோள்களின் சரிவிற் கொழுமையான அம்மயிர்க்கற்றைகள் அலைந்தன. அத்தோள்களின் மணிக்கட்டுகளில் மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பட்ட தொடி யணிந்து விளங்கின. இவ்விளம்பெண் சிறிது உயரமான வடிவுடையளாயிருந்தனள். மங்கைப்பருவத்தினளாகலின், இவள் உறுப்புகளெல்லாம் வளர்ந்து நிரம்பவேண்டும் நிலையை எய்தித் திரண்டு உருண்டு மறுவின்றிச் செவ்விதின் விளங்குவவாயின. இவள் மேனிநிறங் கரியதாதலின்றித் தளதளப்பாக வெளிறிய வண்ணமுடையதாய் மிகவுந் தெளிந்து இலங்கிற்று. செழுங்குருதி கன்னங்களிற்பரவிச் செவ்விய வண்ணத்தோய்ச்சல் உண்டாக்கிற்று. இவள்முகங் கோழிமுட்டை வடிவினதாய் வயங்கிற்று. அன்னப்பறவைபோல் இயற்கைநலங் கனிந்து நீண்டு நுடங்குங் கழுத்தின்மேல் இவள்தலை நிறையொக்கப் பொருத்தப்பட்டிருந்தது. முதலிலே நீலலோசனன் கண்ட சிலநேரங்களாக, இவள் பரியவிழிகளைப் பொதிந்துகொண்ட மூடிகளின் இறைப்பைமயிர் சன்னத்திற்படிந்திருந்தன. இப்போது இவள் தன்விழிகளைத்திறந்தவுடனே, கரியபுட்டிலினின்றும் புறப்பட்ட இருபெரியகனவுகள் அவன் உயிரின் ஆழ்ந்த அறைகளினுட் புகுந்து அறிவை மயக்குதல் போல இரண்டுஒளிகள் அவன்மேற்பாய்ந்தன. அவள் அணிந்திருந்த ஆடை மிக உயர்ந்ததென்று முன்னரே கூறினோம். மேல் இட்டிருந்த உடை பொற்கொட்டைகளுடையனவாய் வெறுங் கரியபட்டினாற் சமைக்கப்பட்டிருந்தது; இடையிற் பூட்டியிருந்த மேகலை கொளுத்துவாயில் உயர்ந்தவயிரமணிகள் அழுத்தப்பட்டு அவிர்ந்தது; ஆடையின் ஓரங்கள் வண்ணத்தோய்ச்சல் சிறிதாயுள்ளபட்டிற் பூத்தொழில் செய்யப்பட்டிருந்தன. இப்பெண்ணின் முதற்றோற்றத்தினாலேயே இவள் யாரோ ஒருசெல்வரின் குடியிற்பிறந்த அருமைமகளாதல் வேண்டுமென்பது நன்கு அறியக்கிடந்தது. இப்பெண் இருந்த இடத்திற்குச் சிறிது தொலைவில் அமைக்கப்பட்ட கூடாரவாயிலின் கீழ்ப் பூச்சிதறிய பசும்புல்

நிலத்தில் நன்கு அணிந்த இருமகளிர் சாய்ந்துகொண்டிருந்தமையினை நீலலோசனன் கண்டபோதும் இக்கருத்து வலியுறுவதாயிற்று.

இனி யிவற்றையெல்லாம் பார்த்த பௌத்த இளைஞனை நீலலோசனன் அறிவு மயங்கிப் பிறவயமாயினான் என்பது ஒரு வியப்பன்று; ஏனெனில் அக்காட்சி முழுதும் ஒருவனது அறிவை மயக்கி அவனுக்கு உவகையினை மிகுவிப்பது திண்ணமேயாகலின் என்க. ஆழத்திற் கிடக்குங் கூழாங்கற்படைகளுங் கண்ணுக்குப் புலனாம்படி பளிங்குபோல் தெளிந்து ஓடும் அந்த நீர் ஓடையும், ஞாயிற்றின் கதிர்களையெல்லாந் தன்னிடத்துச் சிறைப்படுத்திப் பொதிந்துவைத்து இப்போது அவற்றை மேலெல்லாம் வார்த்துக்கொண்டாற்போலப் பசிய தழைகளெல்லாம் பொன்னென மிளிரக் கிளை நெருங்கித் தண்ணிழல்பயந்து தோன்றும் மரங்களும், பல்வேறு வகைப்பட்ட அழகும் நிறனும் உடையவாய்ப் பசும்புற்கற்றைமேல் இறைந்து கிடக்கும் பல்லாயிரம் பூக்களும், அவை முகை விரித்தலாற் காற்றிற் பரந்து உலவுங் குளிர்ந்த நறுமணமும், மேலே கவிந்து திகழும் நீலவானும் என்ற இவையெல்லாம் இவ்விடம் அரம்பைமாதுபோல்வாளான இப்பெண்மணி தனியளாய் இருத்தற்குப் பெரிதுந் தகுதியுடைய கற்பக இளங்காவேயென விளங்கச்செய்தன. மேலும், இங்ஙனம் வழி நடந்துவரும் இம்மலை நாடுகளைப்பற்றித் தான்கற்ற கட்டுக்கதைகளானும் வியத்தக்க வரலாறுகளானும் உணர்ந்தபடியே நற்குணமுடையளான ஒரு சூர்மகள் உறையுமாய நிலத்திற்றான் வந்து சேர்ந்தனமோ என்று நீலலோசனன் தன் இளம்பருவத்தியற்கையாற் பலவாறு கருதுவானாயினன்.

இம்மாது, அவ்விளைஞன் வருதலை முன்னுணர்ந்து குதிரையடியோசையையும் அறியாமல் அவ்வளவு ஆழ்ந்ததொரு நினைவில் தன் அறிவை ஒருங்கச்செய்து அவனைப்பாராது உண்மையாகவே இருந்தனளோ? அல்லது, தான் அவனைப்பார்க்குமுன்னமே அவன் பேரழகாற் சிறந்த தனது உருவத்தைக்கண்டு கண்களுக்கு விருந்து செய்கவென்று எண்ணி அறியாதாள்போன்று வாளாது இருந்தனளோ? நாம் அறியோம். ஆயினும், இங்ஙனம் ஆழ்ந்ததொரு நினைவிற் றன்னையிருத்திச் சிறிதுநேரங் கழிந்ததென்பது திண்ணம். கழிய, உடனே தன் கண்களை எறிட்டு அவனைநோக்குதலும், அவன்மாட்டு ஒரு தடுமாற்றமும் வியப்புங் குறிப்பாய்த் தோன்றி மறுநொடியே மறைந்தன. திரும்பவும் அவள் அவனை எறிட்டுப்பார்த்தனள். உடனே தான் அந்நேரத்திற் செய்தற்குரிய ஒருதகுதியினை மறந்துவிட்டாற்போலத் திடுக்கிட்டுத் தன் முதுகின்புறத்தே குவிந்துகிடந்த சல்லாவினை யிழுத்து முகத்தை மூடிக்கொண்டனள். அவ்வாறு மூடிக்கொள்ளுகையில் தன்

கண்ணுறை மணியினுள்ளே சென்றடங்குவதான ஒருவனைக் குளிர்ந்த ஒளிநோக்கத்தோடும் நீலலோசனன்மேற் றன்பார்வையை ஊன்றினள்.

நீலலோசனன் அப்பெண்மணியைப்பார்த்துப் பணிவாய் வணங்கி வாழ்த்தும்போது, பின்றங்கி வந்த இவன் காவலாளர் இருவரும் இவனுக்குப்பின்னே வந்து சேர்ந்து பணிவின் பொருட்டுச் சிறிது அகன்று குதிரையை நிறுத்திக்கொண்டனர். உண்மையிலேயே கேசரி வீரன் அப்பெண்ணைப் பார்த்தவிடத்துத் தான்செல்லவேண்டிய வழி தெரிவதற்கு நேரம்வாய்த்தது என்பதைத்தவிரப் பிறிதொன்றும் நினைத்திலன்: வியாக்கிரவீரனோ சிறிது இளம்பருவமுடையனாதலாற் பெண் மக்கள் அழகின்நலத்தைக் கண்டு மயங்குதற்கு இடம்பெற்று, அவள் முகத்தின்மேற் சல்லாவை இழுக்கும் அந்நேரத்தே அவளது வடிவழகைக் கண்டு வியந்து "பௌத்தன் அறிய இவள் நிரம்ப அழகுடையளாய் இருக்கின்றனள்!" என்றான்.

அவ்வுரைக்கு ஒத்து நீலலோசனனும், "அழகா! துறக்க நாட்டிற் குரியரான அரம்பைமாதர்களில் இவர் ஒருவராக இருத்தல் வேண்டும்! இவர் இந்நிலமகள் அல்லர்!" என்றுகூறினன்.

இளைஞனை தன்தலைவன் இங்ஙனங் காதல் வயப்பட்டுக் கூறியதைக்கேட்டுக் கேசரிவீரன் முகத்தில் ஒருவெறுப்புக்குறி தோன்றிற்றாயினுந், தனக்குயர்ந்தோனிடத்துப் பாராட்டும் பணிவினால் வாய் பேசாதிருந்தனன். இப்போது நீலலோசனன் தன்குதிரையைச் சிலவடி முன்னேறச் செலுத்தி அம்மங்கையிருக்கும் இடத்திற்குப் பதினைந்து அடி எட்ட நிறுத்திப் பணிவொடுதாழ்ந்து, "மாதரீர், நீலகிரி நகரத்திற்குச் செல்லும்வழி யிதுவோ என்று அறியும்பொருட்டு, தங்கள் ஆழ்ந்தநினைவினிடையே யான் புகுந்து வினவுதலைப் பொறுக்கும்படி வேண்டுகின்றேன்" என்றான்.

அதற்கு அம்மாது, "நீங்கள் வருவதாகத்தோன்றும் வழிமுகமாய்ப் பார்த்தால், இது வழி யன்று" என்று கரும்பினுமினிய சொற்களான் மொழிந்தாள்.

இதனைக் கேட்டதுங் கேசரிவீரன் மற்றையோனை நோக்கி, "அருவருப்பான அக்குடியானவனைப் பார்த்து நான் முன்னமே ஐயப்பட்டேன்" என்று மெல்லச் சொன்னான்.

இதற்குள் அம்மங்கை நீலலோசனனைத் திரும்பவும் பார்த்து, "இந்நாடுகளில் திரிந்து பழக்கம் இல்லாதவர்கள் காணக்கூடாதாயினும், அரசபாட்டைக்கு இங்கேயிருந்துபோகும் ஓர் இடுக்குவழி யிருக்கின்றது. நானும் நீலகிரி நகரத்திற்குத்தான் போகிறேன்" என்றனள். இவ்வாறுசொல்லி இப்படிச்சொல்லியதே மிகுதி யென்று எண்ணினாற் போலவும், இங்ஙனஞ் சொன்னமையால் தானுங் கூடப்போகவிரும்பு

கின்றனள் என்று நினைக்கப்படுமே என அஞ்சினாற்போலவுஞ் சடுதியில் மேலும் பேசுவதை நிறுத்திவிட்டாள்.

உடனே நீலலோசனன், "நங்கைமீர், தங்கட்கு வேறு நல்ல துணையில்லாமல் எங்கள் துணையை ஏற்றுக் கொள்வீர்களாயின், நீங்கள் செல்லும் வழியில் தங்களைப் பாதுகாத்துச் செல்லும் நேரம் எனக்கு வாய்த்ததைப்பற்றி மகிழ்ச்சியும் இறுமாப்பும் எய்துகின்றேன்." என்று கூறினன்.

இதற்கு அந்த நங்கை ஏதும் உடனே மறுமொழி சொல்லவில்லை; அவள் அணிந்திருந்த முக்காட்டின் மடிப்புகளின்வழியே அவள்முகஞ் சிறிது தோன்றியபோது அவள் திரும்பவும் ஆழ்ந்த கருத்தினளாகக் காணப்பட்டாள். கடைசியாகத் தான் பின்பற்றவேண்டும் ஓர் ஏற்பாட்டை முடிவு செய்தாள் போலச் சடுதியில் நீலலோசனனைப்பார்த்து, "இப்படிப்பட்ட துணையொடு செல்வதில் தகுதியில்லாதது ஒன்றுமில்லை. முதலில் உண்மையைச் சொல்லுமிடத்து, இந்நேரம், என்னிடம் வந்து சேர்ந்திருக்கவேண்டிய தக்க ஆண்துணை இன்னும் வாராமையால் நான் ஏமாற்றமடைந்தேன்; அல்லது இவ்விடங்களில் எனக்காகக்காத்துக் கொண்டிருக்கும் அவர்களை நாணுவது போய்க் கண்டுபிடிக்கவேண்டும். என் கூடவந்த பணிப்பெண்கள் அருகாமையில் இருக்கின்றார்கள்; அவர்கள் உங்களுடன் வந்தவர்களைப் பணிவோடும் ஏற்றுக்கொள்வார்கள். யான் தங்கட்கு முன்னே ஏதோகொண்டுவந்து வைக்கும் உணவை ஏற்றுக் கொள்ள உளம் இசைவீர்களானால், தாங்கள் பயணப்படுதற்கு முன்னே சிறிதுணவு கொள்வது நல்லதாகும்." என்று முன்னிலும் இனிமைமிக்க குரலோடும் பேசினள்.

உடனே நீலலோசனன் குதிரையைவிட்டுக் கீழேகுதித்துப், பெற்றுக் கொள்ளுவதற்கு விழிப்பாய்நின்ற வியாக்கிரவீரன் கையிற் கடிவாளத்தை விட்டெறிந்தான். இவ்வாறு நேர்ந்த இந்நிகழ்ச்சியைக் குறித்துக் கவலையடைந்தவன்போலக் கேசரிவீரன் காணப்பட்டான்; ஆயினும், இளம்பருவத்தினனான தன் தலைவனை இடித்து ஒரு சொல்லேனுஞ் சொல்ல அவன் துணிந்திலன்; ஆகவே, அவன் வியாக்கிரவீரனுடன் சென்று, கூடாரத்துக்கு எதிரிலே சாய்ந்தநிலையி லிருந்த அப்பணிப்பெண்கள் இப்போதுதான் எழுந்திருந்த இடத்திற் சேர்ந்தான். அக்கூடாரத்திற்குச் சிறிது அருகாமையிலே அழகான மூன்று குதிரைகள் கொழுமையான புல் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் அழகிய கல்லணை, அங்கவடி முதலியனவெல்லாம் அக்கூடாரத்தினுள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. அப்பணிப்பெண்களில் ஒருத்தி கன்னங்கரேல் என்று இருந்தாள். மற்றொருத்தி நீலகிரி நாட்டுக்குரிய

பெண்கள் வகுப்பைச்சேர்ந்தவளாய் அழகாய் இளம் பருவத்தோடுங் கூடினவளாயிருந்தாள்.

பௌத்த இளைஞனுடன் வந்த இவர்கள் அந்நங்கையின் பணிப்பெண்களோடு உறவாடிக்கொண்டிருக்கையில், நீலலோசனனும் அந்நங்கையும் எவ்வாறிருந்தனர் என்பதைப்பற்றிக் கூறப்புகுவோம். அந்நங்கை மிகவும் அழகிதாய் அமைந்த தனதுகையை நயமாகச் சிறிது அசைத்து அழைத்து நீலலோசனனைத் தனக்கு அருகாமையிற் புல்லின்மேல் இருக்கும்படி சொன்னாள். நீலகிரிக்குப்போகும் பயணத்தில் தானும் அவனோடு செல்ல இசைந்தமையால், இதற்குமுன் அவனைப் பிறன்போலெண்ணிப் பணிவு காட்டிய நடக்கையின் எல்லையை மீறினாள் போலவும், இப்போது நேய மிகுந்த பழக்கமானதைத் தெரிவிப்பாள்போலவும், அந்நங்கை தன்முகத்தை மறைத்திருந்த முக்காட்டை எடுத்துவிட்டாள். அருகாமையிலிருந்து அவள் முகத்தின் பேரழகை இங்ஙனம் நீலலோசனன் கண்டபோது, தான்முன்னே தொலைவில் அவளைக்கண்டு எண்ணியது உண்மையென்று நினைந்தான். அவள் சிறிதேறக்குறைய இருபது ஆண்டுள்ளவள்போற் காணப்பட்டாள்; மடந்தைப்பருவங் கடந்து அரிவைப்பருவம் அடையும்பொழுது முகிழ்க்கின்ற பெருநலங் கனியப்பெற்றிருந்தாள்; ஆனாலும், மடந்தைப் பருவத்தின் புத்திளமை இன்னுஞ் சிறிதேனும் மாறப்பெற்றிலள். அவளது முகஅமைப்பானது மிகவுந் திருத்தமாயிருந்தது. அவள் கண்கள் பெரியனவாயும், அடிக்கடிமாறுங் குறிப்புடையனவாயும் இருந்தன: அவைகள் சிலநேரம் பேரொளிகாட்டி விளங்கின, வேறுசிலநேரம் மென்மையாயும் மங்கலுடனுந் தோன்றின; சிலநேரம் ஒருநொடிக்குள் தமது ஒளிவன்மை முழுதும் அப்பௌத்த இளைஞன்மேல் வீசி, அதன்பிற் கருகி நீண்ட மயிர்நிறைந்த இறைகளாகிய திரைகளின்உள்ளே தம்மை மறைத்துஒளிந்தன. குறுகிச் சிறிதாயிருந்தாலுஞ், செந்நிறம் மிகுந்து திரண்ட இதழ்களோடுங்கூடின அவள் வாயானது பேசும்போதெல்லாம், அவள் தன்கழுத்தில் அணிந்திருந்த மாலையின் முத்துகளைப்போல் வெண்மையான பற்களைத் தோற்றுவித்தது. அவள்விடும் மூச்சோ அமிழ்த மணத்திற் சிறிதுதோய்ந்து வந்தாற்போலத் தோன்றியது. இங்ஙனங் கிட்டக்கண்ட பார்வையானது நீலலோசனன் அந்நங்கையின் அழகைப் பற்றிக் கொண்ட கருத்தை உறுதிசெய்தது. ஆயினும், மனக் கிளர்ச்சியான் எழுந்த வியப்பும், வியப்பினான் எழுந்த மயக்கமுந் தம் முதல்மும்முரம் மாறித் தணிந்தவுடனே, நீலலோசனன், பெண்கட்குரிய மென்மைக் குணத்தில் ஏதோ சிறிது அவளிடத்திற் குறைபட்டிருப்பதைக்கண்டான்; ஒரு பெண்ணை எப்பொழுதுங் கவர்ச்சியுடையளாகச் செய்வதும், ஒருவன் உள்ளத்தில் அவளது அழகின் வலிமையால் ஒரு

நொடிக்குள் உண்டான மதிமயக்கத்தை அங்கே என்றும் நிலைபெறச் செய்வதுமான நாணத்தோடுங்கூடிய இயற்கை மடப்பம் ஏதோ சிறிது அவள்பால் இல்லாமையை அவன் கண்டுணர்ந்தான்.

நீலலோசனன் அந்நங்கையின் அருகாமையிற் புன்மேல் உட்கார்ந்த போது, "சுடுசுடுப்பான ஒரு குடியானவன் எனக்குப் பிசகான வழி காட்டினமையாலன்றோ உங்களுடைய பழக்கத்தைப் பெறும் நல்வினை உடையனானேன்?" என்று கூறினான்.

ஒருவகையில் எவ்வளவோ பொருளைத் தரக்கூடியதும், மற்றொரு வகையில் தான் நினையாமலும் அறியாமலும் உண்டானபழக்கத்தால் தோன்றியதை ஒப்பதுமான ஒருபார்வையை அவன்மேற் செலுத்தி அவள், "சொல்லளித்த துணையானது வந்து சேராமையாலன்றோ நானும் தங்கள் கூட்டுறவாலுந் தங்களுடன் வந்தோராலும் உண்டான நல்ல துணையைப்பெறலாயினேன்?" என்று தானும் எதிர்மொழிந்தாள்.

உடனே நீலலோசனன், "இந்த நீலகிரி நாடுகள் வழிச்செல்வோர் இடரின்றிச் செல்வதற்கு ஏற்றன அல்ல; இதற்கு நான் சிறிது முன்னே அடைந்த துன்பநிகழ்ச்சியேபோதும்" என்றான்.

அதற்கு அவள், "மெய்தான்!" என்றுசொல்லி, அப்பௌத்த இளைஞன்மேல் இரக்கமும் உன்னிப்பும் உடையாள்போல அவனை நோக்கினாள். "எங்கே அவர்களிடத்தில் அகப்பட்டுக்கொள்கின்றேனோ என்று நான் நினைக்கும்போதெல்லாம் நடுக்கம் அடையும்படியான அக்கள்வரில் எவரையேனும் நீங்கள் எதிர்ப்பட்டிருக்கக்கூடுமோ?"

"நங்கைமீர், நல்லான் என்னுங் கள்வர் தலைவனது ஆறலை கூட்டத்தைப்பற்றி நீங்கள் குறிப்பாய்ச் சொல்லுகிறீர்கள் போலும்! அஞ்சாமறவனான அக்கொள்ளைத்தலைவன் மெய்யாகவேயிருக்கின்றான். இளைப்படைந்தோரைக் கிளர்ச்சிப்படுத்த வேண்டியேனும், பிள்ளைகளை அச்சப்படுத்தவேண்டியேனும் வீடுகளிற் பொய்க்கதையாய்ப் பேசப்படுவதில் அவன் சேர்ந்தவன் அல்லன் என்று நான் சொல்லல் பிழையன்று என்பதற்கு எனக்கு நேர்ந்தவையே போதும்." என நீலலோசனன் மறுமொழி கூறினான்.

இங்ஙனம் நீலலோசனன் பேசியபோது அந்நங்கையின் முகம் மிக்க திகில் காட்டிற்று; அவள் நடுக்கமுற்ற குரலோடும் ‘நீங்கள் அக்கொள்ளைக்காரரிடம் அகப்பட்டீர்களோ?" என்றாள்.

உடனே நீலலோசனன், "இன்று காலையிலேதான்" என்று அதற்கு விடைகூறினான். "ஆனால், எங்களை எதிர்த்துச் சண்டையிட்டதில் அவர்கள் மகிழ்வதற்குச் சிறிதும் இடமேஇல்லை. அப்படியல்லா விட்டால், நங்கைமீர், உங்களுக்கு இக்கதையைச் சொல்ல இங்கு வந்திருக்கமாட்டேன்."

பிறகு, நீலலோசனன் கள்வர்கூட்டத்தை எதிர்த்த வகைகளெல்லாம் முற்றும் எடுத்துக் கூறினான். இவ்வாறு இவற்றை இவன் சொல்லி வருகையில் மிகவும் அழகியதான அந்நங்கையின் முகத்தில் நடுக்கம், அச்சம், ஐயம், வியப்பு முதலிய குறிப்புகள் அடுத்தடுத்துத் தோன்றின. மிகவும் ஆரமையான குரலோடு அவள் அப்பெளத்த இளைஞன் அவ்விடரினின்றுந் தப்பியதைப் பற்றியும், அவனதும் அவன்பின் வந்தோரதும் வலிமையைப் பற்றியும் வாழ்த்திச்சொல்லுகையில், அவள் முகத்தில் வியப்புக்குறிப்பு அழுந்திவிளங்கிற்று. அதன்பின் அவள் தன்பெயர் மீனாம்பாள் என்றுந், தான் நீலகிரி நகரத்திற்றான் வழக்கமாய் இருப்பதென்றும், பணக்காரவணிகரான தன் தந்தை பன்னிரண்டு திங்கட்குமுன் திடீரென இறந்து போனமையால் தான் தொலைவிலுள்ள ஒரு நகரத்திற்குப் பயணம்போக வேண்டியதாயிற்றென்றும், அங்கே சென்று தன் வினையினை முடித்தபின்னர்த் திரும்பவுந் தன் வீடு நோக்கிப் புறப்பட்டு வரலாயிற்றென்றுங் கூறினாள்.

மீனாம்பாள் மறுபடியும் அவனை, நோக்கி "என்னொடு தங்கியிருந்தவரான என் நண்பர்கள் என் பயணத்தில் நான் முதற் றங்குமிடம் வரையில் ஒரு தக்கதுணையை விடுத்திருந்தார்கள்; அதன்பின் என்னுடன் வழிச்செல்வதற்கு வழிகாட்டிகளுங் காவற்காரரும் வரும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலைப்பொழுது மிகவும் இனிதாயிருந்தமையால், தக்கதுணையின்றிச் செல்வதால் நேரும் இடர்களையும் மறந்து, புதிய துணை விரைவில் எம்முடன் வந்துசேரும் என நினைந்து, நல்லவெயில் நேரத்தில் தெளி நீர் வேலி எனப்படுவதாகிய இந்த இடத்திற்றான் நான் தங்குவேன் என்று சொல்லிவிட்டு, என்பணிப்பெண்களோடும் பயணம் புறப்பட்டு வந்தேன்; ஆனால் ஏதோகாரணத்தால் அந்தத்துணை இன்னும் வந்து சேர்ந்திலது; இதனால், மனந்துணுக்குற்றும், இங்ஙனம் ஏமாந்து போனமையாற் றளர்புற்றும் மிக்க துயரத்தோடு யான் கவன்று கொண்டிருக்கையிற், பெருமானே, தாங்களுந் தங்கள் பின் வந்தோரும் இவ்விடம்வந்து சேர்ந்தீர்கள்" என்று சொன்னாள்.

உடனே நீலலோசனன், "அழகிற் சிறந்த அம்மை மீனாம்பாள், துணையில்லாமற் செல்வது உங்கட்கு இடர்தருவதேயாயினும், இப்போது யான் உங்கள் துணையாய்வரும்படி நேர்ந்தமையால் நீங்கள் இனி மனங் கலங்கி அஞ்சவேண்டுவ தில்லை. நீங்கள் முன்னமே தெரிந்து கொண்டபடி யானும் நீலகிரிக்குத்தான் செல்லவேண்டியவனாக இருக்கின்றேன். அங்கே நான் முடித்துக்கொள்ளவேண்டிய சில கட்டாயமான வினைகள் உண்டு." என்று மறுமொழி சொன்னான்.

இதற்குமேல், நீலலோசனன் தனது உலகியல்நிலை யின்னதென்றேனுந், தன் வினைகள் [illegible]கயன என்றேனுந், தான் நீலகிரிக்குச்

210484

எம் ஆசிரியர் "வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்" ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் இத்தமிழ்நாட்டுக்குச் செய்த நன்மை அளவில்லாதது. இந்நாட்டின்கட் சென்ற நாற்பதாண்டுகளாகப் பரவிவருஞ் சைவசித்தாந்த உணர்ச்சியானது, அவர்கள் தம் வாழ்நாளிற் செய்து போந்த ஆயிரக்கணக்கான விரிவுரைகளாலும், அவர்கள் தொடர்பாக இயற்றி வெளியிட்டுவந்த பலப்பல தமிழ் உரை நூல்களாலும் விளைந்த பெரும் பயனாகும். இத்தகைய பெரியார் அயல் நாடுகளில் அயல் மதங்களிற் பிறந்திருந்தால், அவர்க்கு உருவச்சிலை அமைத்து, அவர் பெயராற் பல அறநிலையங்கள், கல்லூரிகள், நூல்நிலையங்கள் அமைத்து, அவரியற்றிய நூல்களை அழகியவாய்ப் பதிப்பித்துத் தாமும் பிறரும் பெரும் பயன் எய்துமாறு செய்திருப்பார்கள். மற்று இந்நாட்டவர்களோ, நாயகரவர்களைப் பெரும்பாலும் மறந்தே போய்விட்டார்கள்! அவர் செய்த கைம்மாறில்லாப் பெருநன்றியைப் பாராட்டாமலே போய் விட்டார்கள்! அவர் செய்த நூல்கள் கிடைப்பதே அரிதாய்விட்டது! துயருறத்தக்க இந்நிலையினைக் கண்டு, எமது சோமசுந்தரக் காஞ்சியாக்கம் மூன்றும் பதிப்பிற்சேர்த்து வெளியிடுதற்காக அவரது வரலாற்றினைச் சுருக்கமாக எழுதி வருகின்றோம். ஞானசாகரக் கையொப்பகாரரும் அவரது வரலாற்றினைப் பயின்று பயன்பெறுதற் பொருட்டு அதனை இதன்கண்ணும் வெளியிடத் துவங்கியிருக்கின்றோம்.

நாயகரவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் தெரிந்தவர்கள் அவற்றை எமக்கெழுதி விடுப்பதுடன், அவர்கள் இயற்றிய நூல்களையும் எமக்குக் கொடுத்து உதவுவார்களாயின் நாயகரவர்களின் வரலாற்றை இன்னும் விரிவாக எழுதி அதனை ஒரு தனிநூலாகவே வெளியிடக் கருதியிருக்கின்றேம்; அதன்கண் அதற்கு உதவிசெய்தவர்கள் பெயரையும், அவர்கட்கு எமது நன்றியையுந் தெரிவிப்பேம்.

நாயகரவர்கள் இயற்றிய நூல்கள் மிகுதியாக வடசொற்கள் விரவித் தமிழ்மக்கள் எளிதிற் கற்றறிதற்கு இயலாத நிலையில் இருக்கின்றன. சைவசித்தாந்த உணர்ச்சியும் பொருளும் உடைய செல்வர்கள் எவரேனும் உளராயின், அந்நூல்களை யாம் தனித்தமிழாக்கி வெளியிடுதற்குப் பொருளுதவி செய்து, அழியாப் புகழ் புண்ணியங்களை அடையலாம்.

இனிக், குமுதவல்லி என்னும் மிக இனிய சிறந்த புதுக்கதையைப்பற்றி இங்கே சிறிது சொல்ல வேண்டியிருக்கின்றது. இப் புதுக்கதை "ரெயினால்ட்ஸ்" என்னும் ஆங்கில ஆசிரியர் இயற்றிய "லீலா" என்னுங் கதையின் மொழிபெயர்ப்பாகும். இவ்வாங்கில ஆசிரியர் புதுக்கதை எழுதுதல் தன்னிகரில்லாத் திறத்தை நந்தமிழ் மக்கள் உணர்ந்து களிப்புறல் வேண்டி இது மொழி பெயர்க்கப்பட்டது. இற்றைக்கு 26 ஆண்டுகளுக்குமுன் இக்கதையின் முதல் இரண்டு பாகங்களே வெளியிடப்பட்டன. பிற்பாகங்கள் வெளியிடப்படவில்லை. முன் வெளியான இரண்டு பாகங்களில் முதற்பாகத்தில் மட்டும் இன்னு சில படிகள் விலையாகி வருகின்றன. அக்காலத்தில் யாம் மொழிபெயர்த்த இக்கதையின் முதலிரண்டு பாகங்களின் ஊடே ஊடே சிற்சில வடசொற்கள் கலந்துவிட்டன. இப்போது அவ் வடசொற்களை முற்றும் நீக்கி அவை நின்ற இடங்களில் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து, இவ்வினியகதைநூலை முழுதும் மொழிபெயர்த்து முடிக்கவேண்டுமென்னும் எண்ணத்தாற் சென்ற 2, 3-ஆம் இதழ்களிலிருந்து இதனைப் பதினாறு பதினாறு பக்கங்களாக வெளியிட்டு வருகின்றேம். தமிழ் கற்கும் ஆடவர் மகளிர் இளைஞர் என்னும் முத்திறத்தார்க்கும் இது மிக்க இன்பத்தினையும் நல்லறிவினையுந் தந்து தமிழுணர்ச்சியினை வளர்க்குமென்னும் நம்பிக்கையுடையேம்.

ஞானசாகர ஆசிரியர்.